# அந்நஜாத்

ANNAJAATH ISLAMIC TAMIL MONTHLY
இஸ்லாமிய இலட்சிய மாத இதழ்

Vol : 6 Issue : 10 NOVEMBER 2022 Hijri 1444 R-AKHIR J-AWWAL

Price : Rs. 20/- Annual Subscription : Rs. 225/-

அருளாளன், அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்

## உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக !

மனிதனுக்கு அவனது பெற்றோரைக் குறித்தும் வலியுறுத்தியுள்ளோம், அவனை அவனது தாய் பலவீனத்துக்குமேல் பலவீனப்பட்டவளாகச் சுமந்தாள். அவன் பாலருந்தும் பருவம் இரண்டு ஆண்டுகள். (இறைவனாகிய) எனக்கும் உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே திரும்பி வருதல் உண்டு. (31:14)

And, we have enjoined upon man (care) for his parents. His mother carried him, (increasing her) in weakness upon weakness, and his weaning is in two years. Be grateful to (God) Me and to your parents ; to Me is the (final) destination. (31:14)

# முஸ்லிம்களே நடுநிலையோடு சிந்திப்பீர்!

1. "பித்அத்கள் அனைத்தும் வழிகேடு-நரகிற்கு இட்டுச் செல்லும்" என்று இஸ்லாம்(குர்ஆன், ஹதீஃத்) கூறுகிறது. (பார்க்க : 7:3, 33:36)

"இல்லை; அவைகளில் (பித்அத் ஹஸனா) நல்ல பித்அத்களும் உண்டு. அவை வழிகேடல்ல" என்று தர்கா, தரீக்கா, மத்ஹபு மவ்லவிகள் சுய விளக்கம் தருகின்றனர்.

2. "அல்லாஹ் அல்லாதவர்களிடம் தங்கள் தேவைகளை (இஸ்திஆணு) கேட்பது 'ஷிர்க்'- இறைவனுக்கு இணை வைக்கும் செயல்-வழி கேடு-நரகிற்கு இட்டுச் செல்லும்" என்று இஸ்லாம் (குர்ஆன், ஹதீஃத்) கூறுகிறது. (பார்க்க 18:102-106

"இல்லை, அல்லாஹ்வின் நேசர்களான இறந்து போன அவுலியாக்களிடம் கேட்பது 'ஷிர்க்' அல்ல. இதவும் வழிபாடே" என்று தர்கா மவ்லவிகள் சுய விளக்கம் தருகின்றனர்.

3. "முன்னோர்களை-மூதாதையர்களைப் பின் பற்றி நடப்பது வழிகேடு-நரகிற்கு இட்டுச் செல் லும்" என்று இஸ்லாம் (குர்ஆன், ஹதீஃத்) கூறு கிறது. (2:170)

"இல்லை, அவர்களில் நல்லவர்களைப் பின் பற்றுவது கூடும். அதுவே நேர்வழி" என்று தர்கா, தரீக்கா, மத்ஹபு மவ்லவிகள் சுய விளக்கம் தருகின்றனர்.

4. "அல்லாஹ்வின் புறத்திலிருந்து இறக்கப்படா ததை மற்றவர்களைப் பாதுகாவலர்களாகக் கொண்டு எடுத்து நடப்பது வழிகேடு-நரகிற்கு இட் டுச் செல்லும்" என்று இஸ்லாம் (குர்ஆன், ஹதீஃத்) கூறுகிறது. (பார்க்க 7:3)

"இல்லை, குர்ஆன் ஹதீஃதை சாதாரண மக்கள் விளங்க முடியாது; எனவே, இமாம்கள் விளக்கிச் சொன்னதை எடுத்து நடப்பது அவசியம், அதுவே நேர்வழி. அதாவது மத்ஹபுகளைப் பின்பற்றியே தீர வேண்டும்" என்று தர்கா, தரீக்கா, மத்ஹபு மவ்லவிகள் சுய விளக்கம் தருகின்றனர்.

5. "பிரிவுகள்-பிளவுகள் அனைத்தும் வழிகேடு- நரகிற்கு இட்டுச் செல்லும்" என்று இஸ்லாம் (குர்ஆன், ஹதீஃத்) கூறுகிறது.

(பார்க்க: 3:103, 105, 6:153, 159, 30:32, 42:13,14)

"இல்லை, கொள்கை அடிப்படையிலான பிரிவுகள்- பிளவுகள் (மத்ஹபுகள்) தான் கூடாது. பெயர் அடிப்படையிலான பிரிவுகள்-பிளவுகள் (இயக்கங்கள்) கூடும்" என்று தவ்ஹீத் மவ்லவிகள் சுய விளக்கம் தருகின்றனர்.

6. "அரபி அஜமியை விட சிறந்தவர்-உயர்ந்தவர் அல்லர்; அஜமி அரபியை விட சிறந்தவர்- உயர்ந்தவர் அல்லர்" என்று இஸ்லாம் (குர்ஆன், ஹதீஃத் கூறுகிறது) (பார்க்க: 49:13)

"இல்லை; அரபி கற்றவர்-ஆலிம் சிறந்தவர்-உயர்ந்தவர். அரபி கல்லாதவர்-அவாம் தாழ்ந்தவர் என்று தர்கா, தரீக்கா, மத்ஹபு, தவ்ஹீது மவ்லவிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக சுய விளக்கம் தந்து பிரிவுகள் இல்லா ஒரே சமுதாயத்தை ஆலிம்-அவாம் என்று பிளவுபடுத்தி வைத்துள்ளனர்.

சகோதர, சகோதரிகளே மேலே எடுத்து எழுதி யுள்ள ஆறு விஷயங்களையும் நிதானமாக விருப்பு, வெறுப்பின்றி, ஏற்கனவே உங்கள் உள்ளத்தில் உறைந்து இருக்கும் எண்ணத்தை சில வினாடிகளுக்கு ஒதுக்கி வைத்துவிட்டு, நடு நிலையோடு சிந்தித்துப் பாருங்கள். மனிதர்க ளின் சுய விளக்கத்திற்கு இஸ்லாமிய மார்க்கத் தில் அணு அளவாவது அனுமதி உண்டு என்று நீங்கள் நம்பினால் மேலேயுள்ள ஆறு விஷயங் களும் கூடும் என்ற முடிவுக்கு நீங்கள் வரலாம். அதற்கு மாறாக மார்க்கத்தில் மனித யூகத்திற்கோ, சுயவிளக்கத்திற்கோ அணு அளவும் அனுமதி இல்லை என்பது உங்களின் நம்பிக்கையாக இருந்தால், மேலேயுள்ள ஆறு விஷயங்களும் வழிகேடே-நரகிற்கு இட்டுச் செல்பவையே என்ற முடிவுக்கு மட்டுமே நீங்கள் வர முடியும். அது மட்டுமல்ல; இந்த ஆறில் சில கூடும். சில கூடாது என்ற முடிவுக்கு நீங்கள் வந்தால், உங்களின் சிந் தித்துணரும் திறமையில் கோளாறு இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

மேலும் நீங்கள் கூடாது-வழிகேடு என்று முடிவு செய்து மற்றவர்கள் 'வழிகேடல்ல கூடும்", என்று கூறும்போது அவர்கள் மீது எப்படி நீங்கள் ஆத்திரம் கொள்கிறீர்களோ? அவர்கள் தங்கள் மனோ இச்சைப்படி செயல்படுகிறார்கள் என்ற முடிவுக்கு வருகிறீர்களோ? அதுபோலவே அதே அடிப்படையிலான இன்னொரு வழிகேட்டை நீங்கள் "வழிகேடு அல்ல கூடும்" என்று கூறுவ தும் இந்த ஆறுவகை வழிகேட்டை விட்டு ஒதுங்கி நடப்பவர்களை ஆத்திரம் கொள்ள வைக்கிறது. நீங்களும் உங்கள் மனோ இச்சைப்படி செயல் படுகிறீர்கள் என்று முடிவுக்கு அவர்கள் வரக் கார ணமாகிறது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இப்போது சொல்லுங்கள் நீங்கள் எந்த முடிவில் இருக்கிறீர்கள்? வழிகேடா? நேர்வழியா?

**நவம்பர் மாத பரிசீலனை கூட்டம் 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இன்ஷா அல்லாஹ் நடைபெறும்.**

அருளாளன், அன்பாளன் அல்லாஹ்வின் பெயரால்


# அந்நஜாத்

## இஸ்லாமிய இலட்சிய மாத இதழ்


**இஸ்லாத்தில் புரோகிதத்திற்கு அணுவின் முனை அளவும் அனுமதி இல்லை!**
**புரோகிதம் பஞ்சமா பாவங்களை விடப் பெரும் பாவம்!**
**கொடிய ஹறாம் (கண்டிப்பாகத் தடுக்கப்பட்டது)**
**இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் திருட்டுத்தனமாக இடைத்தரகர்களைப் புகுத்துவது புரோகிதமே!**
**பல பொய்க் கடவுள் வழிபாட்டைத் திணிப்பது புரோகிதமே!**
**மூட நம்பிக்கைகளை வளர்ப்பது புரோகிதமே!**
**ஒரே மனித இனத்தில் பிளவுகளைத் தோற்றுவிப்பது புரோகிதமே!**
**ஜாதி, மதம், மத்ஹபு, தரீக்கா, இயக்கம் போன்ற பிரிவுகளைக் கற்பிப்பது புரோகிதமே!**
**நாத்திகத்தை வித்திட்டு நீர் பாய்ச்சி உரமிட்டு வளர்ப்பது புரோகிதமே!**
**மனித நேயத்திற்கு முட்டுக்கட்டை புரோகிதமே!**
**புரோகிதம் ஒழிந்தால் மனிதம் மலரும்! மனித நேய ம் வளரும்! புரோகிதம் ஒழிந்து மனிதம் மலர, மனித நேயம் வளர அனைவரும் பாடுபடுவோம்.**


النَّجْوَةُ
مجلة شهرية على اسا س القران والحديث
நவம்பர் 2022 ர.ஆகிர்-ஜ.அவ்வல் 1444
ர.ஆகிர் ஆரம்பம் 26.10.2022 முடிவு 24.11.2022


**சந்தா விபரம்**

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டு | ரூ. 225.00 |
| வெளிநாடு ஓராண்டு | ரூ. 750.00 |
| தனிப் பிரதி | ரூ. 20.00 |


M.O., D.D. An Najaath Monthly பெயரில் அனுப்பவும்;
**ANNAJAATH MONTHLY**
**PUNJAB NATIONAL BANK,**
**IFS CODE: PUNB 0440300** W.B.Road, Trichy.
**A/C. NO. 4403002100003973**



**All Legal proceeding arising out of the issue AnNajaath Monthly would come under the Tiruchirappalli court jurisdiction**



**அந்நஜாத் மாத இதழ்**
51,திப்பிரான் தொட்டித்தெரு, திருச்சி-620 008.
ஆசிரியர் : ✆ 9345100888
அலுவலகம் : ✆ 0431-2702417
அலுவலர் : ✆ 8825184161
அச்சகம் : 33,கிலேதார் தெரு, திருச்சி-620 002.
**Cell : 93451 00888** WhatsApp No. **94439 55333**
e-mail : an_najaath@yahoo.co.in
annajaath@gmail.com
visit : www.annajaath.com


**சந்தாதாரர்கள் கவனத்திற்கு:** உங்கள் சந்தா எண்ணும் முடியும் காலமும் உங்கள் முகவரிக்கு மேல் குறிப்பிடப்பட்டுள்ளது. முடிந்த சந்தாதாரர்கள் தங்களது சந்தாவை புதுப்பித்து தீன் பணி தொய்வின்றித் தொடர உதவ அன்புடன் வேண்டுகிறோம்.

**இதழின் உள்ளே!** **பக்கம்**


01. தலையங்கம்! 02
02. மனம் திறந்த மடல்! 04
03. ஜும்ஆ குத்பா! 06
04. நாளை உச்சியில் கணக்கிடும் ஹிஜிரி கமீட்டி காலண்டர்! 10
05. நபி வழி நடந்தால் நரகமில்லை! 12
06. திருக்குர்ஆனை விளங்கி படிக்கவேண்டாமா? 13
07. எது பெண்ணுரிமை? 15
08. இறுதி இறைத்தூதர்(ஸல்) அவர்களின் அரஃபா தினம் வெள்ளிக்கிழமையே! 17
09. சோதனைகளின்போது பொறுமை கொள்ள வேண்டும் 21
10. புகை பிடிப்பதை இஸ்லாம் தடை செய்கிறதா? 24
11. இணைய வழி இல்லம் நுழையும் குழப்பவாதிகள் 27


**அந்நஜாத் Pdf இலவசமாக பெற WhatsApp Noல் வேண்டுகோள் அனுப்பவும்**

# தலையங்கம் : ஒற்றுமையின் பலமும்! வேற்றுமையின் பலவீனமும்!!

அகில இந்திய அளவில் இயங்கிவரும் அனைத்து இந்துத்வா அமைப்புகளும் நாக்பூர் RSS தலைமைக்கு கட்டுப்பட்டவை களே!

அதன் காரணமாக அந்த அமைப்புகளுக்குள் எவ்வித பதவிச் சண்டைகளின்றி போட்டி பொறாமையின்றி ஒரே தலைமைக்குக் கட்டுப்பட்டு ஒற்றுமையாக இந்தியாவை வலுவான நிலையில் ஆளுகின்றனர்.

ஆனால் இஸ்லாமிய பெயர் தாங்கிய அமைப்புக்களோ ஒரே தலைமையின்றி தங்களுக்குள் நாயும், பூனையும் போன்று அடித்துக் கொண்டு கடித்துக் குதறும் வேற்றுமை தன்மையுடையவர்களாக இருக்கின்றனர்.

**பிறகெப்படி அல்லாஹ்வின் உதவி நமக்கு வரும்?**

இன்னும் அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள். (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள், உங்கள் பலம் குன்றிவிடும், (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான். (அல்குர்ஆன் 8:46)

அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறுகின்றனர் :

ஜமாஅத்துல் முஸ்லிமீன் (என்ற) ஜமாஅத்தையும் அதன் இமாமையும் பற்றிப் பிடித்துக் கொள்வீராக!

மற்றப் பிரிவுகள் தவ்ஹீது இயக்க பிரிவுகள், ஹனஃபி, ஷாஃபி, காதியானி ஷிஆ இவை போன்ற) அனைத்தையும் விட்டும் நீங்கிக் கொள்வீராக! என தமக்கு நபி (ஸல்) அவர்கள் உபதேசித்ததாக ஹுதைஃபத்துல் யமான்(ரழி) அவர்கள் அறிவிக்கும் நபிமொழி புகாரி : 3606,7084) என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

ஹுதைஃபா இப்னு யமான்(ரழி) அறிவித்தார் :

மக்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் நன்மையைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நான் நபி(ஸல்) அவர்களிடம் தீமையைப் பற்றிக் கேட்டேன். அது என்னைத் தீண்டிவிடுமோ என்று அஞ்சிய காரணத்தால் தான் (அதைப்பற்றிக் கேட்டேன்) நான், இறைத்தூதர் அவர்களே! நாங்கள் அறியாமைக்கால மாச்சரியத்திலும், தீமையிலும் மூழ்கிக் கிடந்தோம். அப்போது அல்லாஹ் (இஸ்லாம் எனும்) நன்மையை எங்களிடம் கொண்டுவந்தான். இந்த நன்மைக்குப் பிறகு ஒரு தீமை (குழப்பம்) இருக்கிறதா? என்று கேட்டேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள், ‘ஆம்’ (இருக்கிறது) என்று பதிலளித்தார்கள். நான், ‘இந்தத் தீமைக்குப் பிறகு நன்மை ஏதும்இருக்கிறதா?’என்று கேட்டேன்.

நபி(ஸல்) அவர்கள், ‘ஆம்’! ஆனால், அதில் சற்று கலங்கலான நிலை (குழப்பம்) இருக்கும் என்று பதிலளிக்க நான், ‘அந்தக் கலங்கலான நிலை என்ன?’ என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ‘ஒரு சமுதாயத்தார் என்னுடைய நேர்வழியில்லாத ஒன்றைக் கொண்டு பிறருக்கு வழிகாட்டுவார்கள். அவர்களில் நன்மையையும் நீ காண்பாய், தீமையையும் காண்பாய் என்று பதிலளித்தார்கள். நான், ‘அந்த நன்மைக்குப் பிறகு ஒரு தீமை உண்டா?’ என்று கேட்டேன். அதற்கு அவர்கள், ‘ஆம்’! நரகத்தின் வாசல்களுக்கு (வருமாறு) அழைப்பவர்கள் சிலர் தோன்றுவார்கள். அவர்களின் அழைப்பை ஏற்பவனை நரகத்தில் அவர்கள் எறிந்து விடுவார்கள் என்று பதிலளித்தார்கள்.

நான், ‘இறைத்தூதர் அவர்களே! அவர்க(ளுடைய அடையாளங்க)ளை எங்களுக்க்

குத் தெரிவியுங்கள்' என்று கேட்க, நபி(ஸல்) அவர்கள், 'அவர்கள் நம் இனத்தைச் சேர்ந்தவர்களாகவேயிருப்பார்கள், நம் மொழிகளாலேயே பேசுவார்கள்' என்று பதிலளித்தார்கள். 'நான் இந்த (மனிதர்களைச் சந்திக்கும்) நிலையை அடைந்தால் என்ன (செய்ய வேண்டுமென்று) எனக்குக் கட்டளையிடுகிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'நீ முஸ்லிம்களின் ஜமாஅத்தை (கூட்டமைப்பையும் அவர்களின் தலைவரையும் (இறுகப்) பற்றிக்கொள்' என்று பதில் கூறினார்கள். அதற்கு நான், 'அவர்களுக்கு ஒரு கூட்டமைப்போ, ஒரு தலைவரோ இல்லை (பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கிறார்கள்) என்றால் (என்ன செய்வது?)' என்று கேட்க, நபி(ஸல்) அவர்கள், 'அந்தப் பிரிவுகள் அனைத்தையும் விட்டு (விலகி) ஒதுங்கிவிடு, ஒரு மரத்தின் வேர் பாகத்தை பற்களால் நீ கவ்விப் பிடித்திருக்க நேர்ந்து, அதே நிலையில் மரணம் உன்னைத் தழுவினாலும் சரி! (எந்தப் பிரிவினரோடும் சேராமல் தனித்தே இரு)' என்று பதிலளித்தார்கள். (புகாரி:3606, அத்தியாயம்: 61)

---

**(20ம் பக்க தொடர்ச்சி)**

அவர்கள் ஒரு காலை முன்னெடுத்து வைத்தால் மறு காலைப் பின்னோக்கி வைக்கின்றார்கள். அவர்களுக்கு எதிலும் ஓர் உறுதியான நிலைப்பாடு கிடையாது. அவர்கள் தடுமாற்றத்திற்கும் அழிவுக்கும் ஆளான மக்கள் ஆவர். அவர்கள் இவர்களுடனும் இல்லை, அவர்களுடனும் இல்லை.

*(தஃப் ஸீர் இப்னு கஸீர் : 4, பக்கம் 289, 290)*

மேலும் மனிதர்களில் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் *(அந்தப் பக்கமும் இல்லாமல், இந்தப் பக்கமும் இல்லாமல் மதில்மேல் பூனை போன்று) விளிம்பில் நின்றுகொண்டு அல்லாஹ்வை வணங்குகின்றனர். அவர்கள் இம்மையும் இழந்து விட்டார்கள். மறுமையையும் இழந்து விட்டார்கள். இதுதான் பகிரங்கமான நஷ்டமாகும். (22:11)*

அல்லாஹ் பாதுகாக்க வேண்டும். அனுமானம், யூகம், சந்தேகமானவற்றைப் பின்பற்றுவது என்பது எவ்வளவு பெரிய பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. மேலும் அல்லாஹ்வுடைய தூதர்(ஸல்) அவர்கள் கூறுவதைப் பாருங்கள்.

*உமக்கு சந்தேகம் ஏற்படுத்துவதை விட்டும் விலகி விடுவீராக! சந்தேகமற்ற உறுதியான விஷயங்களின் பால் நீர் சென்று விடுவீராக! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். நுஃமான் பின் பஷீர்(ரழி) ஹஸ்ஸான்பின் அபீ ஸனான்(ரஹ்), புகாரி பாகம் 2, பக்கம் 700, பாடம் 3, ஹதீத் எண். 52, திர்மிதி, அஹ்மத்)*

*உமக்கு சந்தேகம் ஏற்படுத்துவதை விட்டும் விலகி விடுவீராக! உமக்கு சந்தேகம் ஏற்படாதவைகளின் பக்கமாகச் சென்று விடுவீராக! நிச்சயமாக உண்மையானது அமைதி, பொய்யானது சந்தேகம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அபூ முஹம்மது ஹஸன் இப்னு அலி(ரழி), திர்மிதி, 2518, ரியாதுஸ் ஸாலிஹீன்: 55,593.*

எவர் சந்தேகத்திற்கிடமானவைகளைத் தவிர்த்துக் கொள்கின்றாரோ அவர் தனது மார்க்கத்திற்கும் தனது மானம் மரியாதைக்கும் களங்கம் ஏற்படுத்துபவைகளை விட்டும் விலகித் தூய்மையானவராகி விடுகின்றார். எவர் சந்தேகமானவைகளில் போய் விழுகின்றாரோ அவர் பாவமானவைகளில் சென்றுவிடக் கூடும். எச்சரிக்கை! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பவர்: நுஃமான் பின் பஷீர்(ரழி) அவர்கள் புகாரி: 52, ரியாதுஸ் ஸாலிஹீன் 588, முஸ்லிம்:1599)*

'அரஃபா' தினம் தொடர்பான சந்தேகமான விசயங்களைத் தவிர்த்து சந்தேகமற்ற பலமான அறிவிப்புகளின்பால் செல்வோமாக.

# மனம் திறந்த மடல்!

S.M. அமீர், நிந்தாவூர், இலங்கை

**...ஆங்கில நாளின் ஆரம்பம் உச்சிப் பொழுதுக்கு முட்டுக் கொடுப்பதற்கென்றே தயாரிப்போடும், தீர்மானத்தோடும் வந்த சகோதரர் முஹம்மது அலியின் பேச்சில் உங்களுக்கு ஏதாவது புரிந்ததா?**

ஹிஜ்ரிக் கமிட்டியில் உள்ளவர்களில் தெளிவான நாவன்மை, பதட்டம் இல்லாத நிதானம், தூரநோக்குச் சிந்தனை, தெளிவான பேச்சு, பொலிவான முகம், புரிய வைக்கும் திறமை என மிகவும் சிறந்த ஒருவராக இதுவரை சகோதரர் ‘அஹ்மது ஸாஹிபை’ நான் கருதினேன். மார்க்கத்திற்காக, அல்லாஹ்விற்காக உண்மையான நேசம் கொண்டேன், கொண்டிருந்தேன், கொண்டிருக்கிறேன்.

ஆனாலும் சமீபத்திய அவரது அலட்சியம் நிறைந்த குரல் பதிவை நான் கேட்டு அதிர்ந்து போனேன் உண்மையில் இந்த பிறை விவகாரம் இந்த அளவிற்கு முறுகல் நிலையை அடைந்ததற்கு இவரே முக்கிய காரணம் என எண்ணத் தோன்றுகிறது. இவர் நினைத்திருந்தால் காதும், காதும் வைத்ததுபோல இந்த விடயத்தை கையாண்டிருக்கலாம். இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கலாம். ஆனாலும் இடையில் இரு தரப்பாரிடையிலும் ஷைத்தான் புகுந்து பிரிவினைக்காக சதி செய்து கொண்டிருக்கின்றான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

ஆக இரண்டு தரப்பாருக்கும் இடையே உள்ள சர்ச்சையானது ஆறு அல்லது ஏழு மணித்தியாலங்கள்தான் வித்தியாசம் காதும், காதும் வைத்தது போல அதனை காலண்டரில் சிறு மாற்றம் செய்து இரு அணிகளுக்கிடையே ஒற்றுமையைக் கொண்டு வந்திருக்கலாம். இதைவிடப் பாரதூரமான எத்தனையோ விடயங்களில் சமுதாய நலனுக்காக, ஒற்றுமைக்காக, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விட்டுக்கொடுத்துப் போயிருக்கின்றார்கள். கட்டுக்கோப்பை உறுதிப் படுத்தினார்கள்.

ஆனால் இவரோ! ஏழு கடல் தாண்டினாலும் மார்க்கத்திற்குக் கரைகாண முடியாது. அது என்ன சாமானிய விஷயமா என்று கூறிய மூட முல்லாக்கள், மௌலவிமார்கள், புரோகிதர்கள், பூசாரிமார்கள், மக்களின் தலையைக் கழுவிய கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. ஆ.ஓ. அது எப்படி முடியும்? சாத்தியமே இல்லை என்று குதிக்கின்றாரே! அவரால் முடியாது, சாத்தியமற்றது என்று பேசிய அந்த விவகாரம் அவரது பார்வையில் ஒன்றுமே தெரியாதவர் என்று கருதிய அப்துர்ரஹ்மானால் எப்படி சாத்தியமானது.

அந்த ஏழு மணித்தியாலங்களை உள்ளடக்கி எவ்வாறு அவரால் காலண்டர் போட முடிந்தது. நம் கண்முன்னே இருக்கிறதே இதை நாம் மறுக்க முடியுமா? ஆரம்பத்திலேயே அப்துர்ரஹ்மான் சொன்னதைக் கொஞ்சம் உள்வாங்கி சிந்திந்திருந்தால், செயல்பட்டிருந்தால் இந்த விரிசல் தோன்றியிருக்குமா? நமக்கு இவரு சொல்வது என்ன? நாம் என்ன கேட்பது எனும் அவரது ஆணவப் போக்கே இதற்குக் காரணம் என எண்ணத் தோன்றுகிறது.

முஸ்லிம்களாகிய நாம் ஓர் சமுதாய ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு இரண்டு அணிகளுக்கிடையே ஏற்பட்ட சிறு கருத்து வேறுபாட்டை நீக்கி அதற்கான சிறிய தொரு மாற்றத்தைச் செய்து ஒற்றுமையாகப் பாடுபடுவதன் மூலம் நமக்கு என்ன குறைந்துவிடப் போகிறது? எவன் நம்மிடம் கேட்கப் போகிறான்? அன்னியனான

அவன் போட்ட காலண்டர் அவனோட இருக்கட்டும் நாம் நமக்கென்றோர் தனித்துவமான காலண்டர் போட்டுக் கொள்வதில் நமக்கு என்ன பிரச்சினை? எவன் நம்மிடம் கேட்கப் போகிறான்.

ஆனாலும் ஆகா! ஓகோ! எப்படி சாத்தியமாகும் என்ற இவரது பேச்சு வெறும் பிதற்றலேயாகும் என நான் கருதுகின்றேன். இன்று தனியொரு ஆளாக நின்று கொண்டு போட்ட காலண்டர் குறித்து எவனும் அப்துர்ரஹ்மானை இதுவரை கேட்கவில்லையே! ஆதிக்க வெறியர்கள், அன்னியர்கள், எவரும் அச்சுறுத்தவில்லையே! அவரது காலண்டர் பல வருடங்களாக ஓடிக் கொண்டுதானே இருக்கிறது. இது எவ்வாறு இவருக்கு சாத்தியமானது. இது ஏன்? அவருக்கு சாத்தியமற்றதாக இருக்கிறது.

'கால் தூரசுக்கும் பெறுமதி இல்லை' என்று பேசுகின்றாரே! பொறுப்பு வாய்ந்த ஒருவர் இவ்வாறு பேசலாமா? இவரிடத்தில் நீதியை, நேர்மையை, நடுநிலைத் தன்மையை, நாம் எதிர்பார்க்கலாமா? நேற்று வரை எனக்கு அவரோடு இருந்த மதிப்பு மரியாதை என்று எங்கு போனது என்று எனக்குத் தெரியவில்லையே. இதுவரை அவர் தீனுக்காக செய்த தியாகம், உழைப்பு, முயற்சி போன்றவற்றின் நிலை என்ன? என்று இன்று கேள்விக் குறியாக நிற்கிறதே. இவரது பார்வையில், 'கால் தூரசுக்கும் பெறுமதி இல்லாதவர்களால்'.

உலகின் சில பாகங்களில் உள்ளவர்கள் சங்கமம் நடைபெறுவதற்கு முன்னரே! சங்கம நாளிலேயே நோன்பையும், பெருநாளையும், புது வருடத்தையும் அடைந்து கொள்ளுதல் எனும் குறைபாட்டைத் தவிர்த்து முழு உலக மக்களும் முழுமையாக சங்கமம் ஆனபின்னர் நோன்பையும், பெருநாளையும், புதுவருடத்தையும் அடைந்து கொள்ளும் பொருட்டு 'கால் தூரசுக்கும் பெறுமதி இல்லாதவர்களால்' காலண்டர் போட முடியும் என்றிருந்தால் ஏன் இவர்களால் முடியவில்லை?

ஆதாரப்பூர்வமான அறிவிப்புகளின் பிரகாரம், பின்னோக்கிக் கணக்கிட்டுச் சென்றால் அரஃபாவுடைய நாள் வெள்ளிக்கிழமை வருகின்றவாறு "கால் தூரசுக்கும் பெறுமதி இல்லாதவர்களால்" காலண்டர் போட முடியும் என்றிருந்தால்; ஏன்? இவர்களால் முடியவில்லை.

ஆதாரப்பூர்வமான அறிவிப்புகளிலிருந்து மாதத்தின் வெள்ளை நாட்கள் என்பது 13,14,15 என்றிருக்க அதற்கு மாற்றமாக பிறை 16லும் பௌர்ணமி வருவதைத் தவிர்த்து 'கால் தூரசுக்கும் பெறுமதி இல்லாதவர்களால்' காலண்டர் போட முடியும் என்றிருந்தால்; ஏன்? இவர்களால் முடியவில்லை.

'கால் தூரசுக்கும் பெறுமதி இல்லாதவர்கள்' ஹிஜ்ரிக் காலண்டரில் பிழைகள் இருக்கின்றன. வாருங்கள் இரு அணியினரும் ஒன்றாக அமர்ந்து பேசி ஒன்றாக ஆக்குவோம் என்று பகிரங்கமாக அழைக்கின்றார்கள். இவர்கள் ஏன் வர மறுக்கிறார்கள். அடுத்து;

ஆங்கில நாளின் ஆரம்பம் உச்சிப் பொழுதுக்கு முட்டுக் கொடுப்பதற்கென்றே தயாரிப்போடு, தீர்மானத்தோடு வந்த சகோதரர் முஹம்மது அலியின் பேச்சில் உங்களுக்கு ஏதாவது புரிந்ததா? உச்சிப் பொழுதுக்கு முட்டுக் கொடுப்பதற்கென்றே சில குர்ஆன் வசனங்களைத் தேடி எடுத்துத் திரித்து வளைத்துக் கூடியிருந்தவர்களை அச்சுறுத்தி அச்சுறுத்தி தலையைக் கழுவினார் அவ்வளவுதான். அவரது பேச்சோடு ஹிஜ்ரிக் கமிட்டியினரில் எனக்கு இருந்த நல்லெண்ணம், நன்நம்பிக்கை, நாணயம், எதிர்பார்ப்பு அற்றுப் போய்விட்டது. எஞ்சியிருந்த மிச்சம் மிகுதியும் அஹமது ஸாஹிபுடைய பேச்சிலிருந்து அகன்று போனது என்றுதான் சொல்ல வேண்டும். எனக்குத் தூக்கமே வரவில்லை. இரவு நடுநிசியில் எழுந்திருந்து இதனை உங்களோடு நான் பகிர்ந்து கொள்கிறேன். என் மன ஆறுதலுக்காக தவறுகள் இருந்தால் பொறுத்துக் கொள்க.

# ஜும்ஆ குத்பா!

K.M.H. அபூ அப்தில்லாஹ்

## மறு பதிப்பு :

**...முஸ்லிம்களுக்கு வணக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும், பக்தி(இறையச்சம்)– நேர்மை ஆகியவற்றின் அவசியம் பற்றியும் அழகியதோர் உபதேசம் (சொற்பொழிவு) செய்தனர். இதற்குத்தான் 'ஜும்ஆ குத்பா' என்று பெயர்! பெருமானார்(ஸல்) அவர்களின் முதல் ஜும்ஆ தொழுகையும், முதல் குத்பாவும் இதுவேயாகும்.**

முஸ்லிம்கள் வாரத்தின் ஒரு நாள் ஒன்று கூடி மார்க்க உபதேசம் (குத்பா) பெறும் நாளாக வெள்ளிக்கிழமையை அல்லாஹ் அளித்து அருள் புரிந்திருக்கிறான். இதே போல் வாரத்தில் ஒருநாள் ஒன்று கூடும் நாளாக யூதர்களுக்கு சனிக்கிழமையையும், கிறிஸ்தவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையையும் அல்லாஹ் அளித்திருந்தான். யூதர்களும், கிறிஸ்தவர்களும் எப்படி அந்த நாட்களை அல்லாஹ்வின் கட்டளைப்படி செல விடாமல், தங்களின் மனோ இச்சைப்படி ஆக்கிக் கொண்டார்களோ அதேபோல் முஸ்லிம்களும் வெள்ளிக்கிழமை ஜும் ஆவை-ஜும்ஆ குத்பாவை அல்லாஹ்வின் கட்டளைப்படிச் செய்யாமல், தங்களின் மனம்போன போக்கின்படி செயல்பட்டு ஜும்ஆ குத்பாவை ஒரு வெற்றுச் சடங்காக ஆக்கி இருக்கிறார்கள். ஜும்ஆ நேரத்தில் பெரும்பான்மை முஸ்லிம்கள் செய்யும் செயல்பாடுகள் நபி(ஸல்) அவர்கள் கற்றுத் தந்துள்ளதற்கு முரணாக அமைந்துள்ளதை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

இன்று நமது இந்திய நாட்டில் ஜும்ஆவுடைய தினத்தில் என்ன நடைபெறுகிறது. என்று பார்க்கும்போது, நபி(ஸல்) அவர்களுடைய காலத்தில் ஜும்ஆவுடைய பாங்கு ஒன்றாக இருந்ததை இவர்கள் இரண்டாக அதிகப்படுத்தி இருக்கிறார்கள். நபி(ஸல்) அவர்களது காலத்தில் அவர்கள் ஒரு தடியையோ அல்லது வாளையோ பிடித்துக் கொண்டே ஜும்ஆ உரை நிகழ்த்தினார்கள்; எனவே நாங்களும் இந்த நவீன காலத்திலும் அதே வாளையோ, தடியையோ பிடித்துக் கொண்டுதான் உரை நிகழ்த்துவோம்; அதுவும் அரபியில்தான் உரை நிகழ்த்துவோம்; என்று செயல்படுகிறார்கள். இந்த அறிஞர்களின் போக்கு எப்படி இருக்கிறதென்றால் மார்க்கத்தின் சத்தையும், சாரையும் விட்டு வெறும் சக்கையை மட்டுமே மார்க்கமாக - மதமாக கொள்வோம் என்று கூறும் மற்ற நபிமார்களின் உம்மத்திலுள்ள புரோகிதர்களின் அதே பிடிவாத போக்கே முஸ்லிம் மதப் புரோகிதர்களிடம் காணப்படுகிறது.

குத்பா-பிரசங்கம் தங்கள் முன்னே அமர்ந்துள்ள மக்களுக்காகச் செய்யப்படுவதாகும். எனவே அந்த மக்கள் புரிந்து கொள்ளும் நிலையில் அவர்களது மொழியில் இருக்க வேண்டும்; அதுவே குத்பா-பிரசங்கம் என்ற சாதாரண அடிப்படை உண்மையைக் கூட புறந்தள்ளும் மார்க்க அறிஞர்களையே பார்க்க முடிகிறது. மக்கள் எங்கள் உபதேசத்தைப் புரிந்து கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை; அவர்கள் ஜும்ஆவுடைய நேரத்தில் பள்ளிக்கு வந்து குறட்டை விட்டு தூங்கினாலும் பரவாயில்லை. அவர்களுக்குப் புரியாத அரபி பாஷையில் தான் எங்களது குத்பாவை-பிரசங்கத்தை நாங்கள் செய்து முடிப்போம் என்ற வீராப்போடு பேசுகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணம்! நபி(ஸல்) அவர்கள் தங்களது குத்பாவை - பிரசங்கத்தை அரபி பாஷையில் நிகழ்த்தினார்கள் என்பதுதான். அது சரி! அன்று நபி(ஸல்) அவர்கள் முன்னிலையில் அமர்ந்திருந்தவர்கள் அரபி மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களா? அல்லது நம்மைப் போல் தமிழை தாய்மொழியாகக் கொண்டவர்களா? அரபிமொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தவர்

களுக்கு முன்னால் நபி(ஸல்) அவர்கள் அந்த மக்களுக்குப் புரியும் வகையில் அவர்களின் தாய் பாஷையான அரபியில் குத்பா-பிரசங்கம் செய்தார்கள். இப்போது அதேபோல் தமிழ் பேசும் மக்கள் முன்னால் குத்பா-பிரசங்கம் செய்யும் அறிஞர்கள் அவர்களின் தாய்மொழியான தமிழில் குத்பா-பிரசங்கம் செய்யவேண்டும் என்ற சாதாரண அடிப்படை உண்மையைக் கூட புரியாதவர்களாகவா இருக்கிறார்கள்? அல்லது நபி (ஸல்) அவர்கள் தங்களுக்கு முன்னால் அமர்ந்திருக்கும் மக்களுக்குப் புரியாத நிலையில் அவர்கள் அறியாத மொழியில் குத்பா-பிரசங்கம் செய்தார்கள். அதைப் பின்பற்றியே நாங்கள் தமிழ் பேசும் மக்கள் முன்னிலையில் அவர்கள் புரியாத நிலையில் அரபியில் குத்பா-பிரசங்கம் செய்கிறோம் என்கிறார்களா?

தங்களுக்கு முன்னால் அமர்ந்திருக்கும் தமிழ் பேசும் மக்களுக்குப் புரியாத அரபி பாஷையில் குத்பா-பிரசங்கம் செய்வதற்கு இந்த அறிஞர்கள் கூறும் இன்னொரு காரணம் என்ன தெரியுமா? குத்பா-பிரசங்கமும் வணக்க வழிபாடான தொழுகையைச் சார்ந்தது. எனவே தொழுகையை அரபியில் நிறைவேற்றுவது போல், குத்பாவையும்-பிரசங்கத்தையும் அரபியில் செய்கிறோம் என்பதாகும். அதாவது இந்த அறிஞர்களின் கருத்துப்படி நான்கு ரகாஅத்துகளாக இருக்கும் லுஹர் தொழுகையை ஜுஃம்ஆ தினத்தில் இரண்டு ரகாஅத்தாகத் தொழுவதால் எஞ்சிய இரண்டு ரகாஅத்திற்குப் பதிலாக இந்த குத்பா-பிரசங்கம் இருக்கிறது. எனவே தொழுகையை அரபியில் நிறைவேற்றுவது போல், குத்பா-பிரசங்கத்தையும் அரபியிலேயே செய்ய வேண்டும் என்கிறார்கள். இவர்கள் கூறுவது போல் இரண்டு ரகாஅத்திற்குப் பகரமாக இந்த குத்பா-பிரசங்கம் இருக்கிறது என்பதற்கு ஒரு ஹதீத் ஆதாரமுமில்லை. இவர்களது யூகமாக, அனுமானமாக இப்படியொரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார்களே அல்லாமல் நபிவழியில் ஆதாரத்தை இவர்களால் தரமுடியாது. ஹதீது ஆதாரப்படி இந்த குத்பா-பிரசங்கம் கடமையானது. அதனால் குத்பா-பிரசங்கம் இல்லாத நிலையில் ஜுஃம்ஆ தொழுகை நிறைவேறாது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. குத்பா-பிரசங்கம் இல்லாத நிலையில் ஜுஃம்ஆவிற்கு இரண்டு ரகாஅத்துகள் தொழுதாலும் நிச்சயம் ஜுஃம்ஆ நிறைவேறிவிடும். மக்களுக்கு பலனளிக்கக் கூடிய குத்பா-பிரசங்கத்தை கைவிட்ட குறைதான் இருக்கும். குத்பா-பிரசங்கம் அரபியில் செய்வதும் அல்லது செய்யாமல் விடுவதும் இரண்டும் ஒன்றுதான். மற்றபடி மக்களுக்கு உபதேசம் செய்யவேண்டும் என்ற அசல் குறிக்கோள் இவர்கள் அரபியில் குத்பா-பிரசங்கம் செய்வதால் நிறைவேறுவதில்லை. இதோ முதல் ஜுஃம்ஆ பற்றி அவர்களின் மாத இதழ் ஒன்றில் எழுதியுள்ளது வருமாறு:

**முதல் ஜுஃம்ஆ!**

பனுஸாலிம் எனும் குலத்தார் வாழும் பிரதேசத்தை அடைந்ததும், மதிய தொழுகை நேரம் வந்துவிட்டதால், பெருமானார் (ஸல்) அவர்கள் 'ஜுஃம்ஆ' தொழுகையை அங்கேயே நிறைவேற்றினர்! தொழுகைக்கு முன்னர், நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் முஸ்லிம்களுக்கு வணக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும், பக்தி(இறையச்சம்)-நேர்மை ஆகியவற்றின் அவசியம் பற்றியும் அழகியதோர் உபதேசம் (சொற்பொழிவு) செய்தனர். இதற்குத்தான் 'ஜுஃம்ஆ குத்பா' என்று பெயர்! பெருமானார்(ஸல்) அவர்களின் முதல் ஜுஃம்ஆ தொழுகையும், முதல் குத்பாவும் இதுவேயாகும்.

ஆக இவ்வளவு அழகாகவும் தெளிவாகவும் ஜுஃம்ஆ குத்பா-பிரசங்கம் பற்றி எழுதிவிட்டுத்தான் அதன் பின்னர் மார்க்க பிக்ஹுஃ சட்ட நூல்களில் இந்த குத்பா பற்றி என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று கூறி குட்டையைக் குழப்பி இருக்கிறது அந்த மாத இதழ். ஆக குர்ஆன், ஹதீதில் தெள்ளத் தெளிவாக உள்ள விஷயங்களை குழப்பி, குழப்பிய குட்டையில் மீன் பிடிப்பதுதான் பிக்ஹுஃ கலை-மத்ஹபுகள். குர்ஆன், ஹதீதில் உள்ளதை தெளிவுபடுத்துவது பிக்ஹுஃ

கலை அல்ல; தெளிவாக இருப்பதைக் குழப்பி-இலேசாக இருப்பதைக் கஷ்ட மாக்கி மக்களின் உள்ளங்களில் மார்க்கக் கடமைகளைக் கடைபிடித்து நடப்பது சாத்தியமில்லாத செயல் என்ற எண்ணத்தை வளர்த்து மக்களை மார்க்கத்தை விட்டும் தூரப்படுத்துவது தான் பிக்ஹு கலை-மத் ஹபுகள். இதற்கு இதுபோல் எண்ணற்ற ஆதாரங்களை இங்கு தரமுடியும். ஆனால் அது இக்கட்டுரையின் நோக்கமல்ல.

ஆனால் ஜும்ஆ தினத்தில் மக்களுக்கு வணக்கத்தின் முக்கியம், பக்தி(தக்வா), நேர்மை, கடமை தவறாமை போன்ற நல்லு பதேசங்களை எடுத்துச் சொல்வதுதான் ஜும்ஆ குத்பா-பிரசங்கம் என்பதை அவர் களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் என்பது தான் நமது கவனத்திற்கு உரியது. அப்படி யானால் இந்த உபதேசம் அவரவர்களின் தாய்மொழியில் இருந்தால்தான் அந்த மக் கள் அந்த உபதேசத்தை விளங்க முடியும் என்பதை பாமரனும் ஒப்புக்கொள்வான். ஆனால் இந்த மார்க்க அறிஞர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள்.

ஆனால் இந்தக் குறையைப் போக்க இந்த மார்க்க அறிஞர்கள் இன்னொரு பித்அத்தை-புதுமையை புதிதாக உருவாக்கி இருக்கிறார்கள். ஜும்ஆ குத்பா-பிரசங்கம் இரண்டு என்று இருப்பதை இவர்கள் மூன் றாக ஆக்கி இருக்கிறார்கள். அதுவும் ஜும்ஆ வின் அசலான-நபிவழியான பாங்கிற்கு முன்னர் மக்களுக்கு தமிழில் உபதேசம் செய்கிறோம் என்ற சாக்கில் பெரும்பாலும் கற்பனைக் கதைகளையும், கட்டுக்கதை களையும் பெரியார்களின் பெயரால் அவிழ்த்து விடுகிறார்கள். இவர்களின் இந்த உபதேசத்தை மார்க்கத்தை முறையாக குர்ஆன், ஹதீத்படி விளங்கியவன் கேட்கச் சகிக்காது, அடக்க முடியாத ஆத்திரமும், கோப மும் தான் வரும். ஆனால் இந்த மார்க்க அறி ஞர்களோ குர்ஆனுக்கும், ஹதீதுக்கும் முரண் பட்ட இப்படிப்பட்ட கட்டுக்கதைகளைத் தான் மார்க்கமாக அப்பாவி மக்களுக்கு உப தேசிக்கின்றனர். அசலான ஜும்ஆ குத்பாவை -பிரசங்கத்தை மக்களுக்குப் புரியாத நிலை யில் அரபியில் செய்கிறவர்கள், ஜும்ஆ பாங்குக்கு முன்னால் பித்அத்தாகச் செய்யக் கூடிய குத்பாவில்-உபதேசத்தில் கட்டுக் கதைகளைச் சொல்லி அப்பாவி முஸ்லிம் களின் உள்ளத்தில் நஞ்சைக் கலக்கிறார்கள். முதலில் ஜும்ஆ தினத்தில் ஜும்ஆ பாங்கிற் குப் பிறகு செய்யப்படும் ஜும்ஆ குத்பா-பிரசங்கத்திற்கு முன், கூட்டு அமல் எதுவுமே செய்யக்கூடாது என்ற நபி (ஸல்) அவர்கள் கட்டளையை மீறுகிறார்கள்; அந்த ஹதீத் வருமாறு :

*நபி(ஸல்) அவர்கள் பள்ளியில் விற்பதை யும், வாங்குவதையும், தவறி விட்டதைத் தேடுவதையும், கவி பாடுவதையும், வெள் ளிக்கிழமை ஜும்ஆவுக்கு முன்னர் அங்கு கூட்டமாகக் கூடுவதையும் தடை செய்த னர். அறிவிப்பவர்:அம்ருப்னு ஷுஐப் (ரழி), நூல் : சுனன். நஸயீ : 714*

இந்த ஹதீத்படி வெள்ளிக்கிழமை ஜும்ஆவின் அசலான-நபிவழியிலான பாங் கிற்குப் பின் ஜும்ஆ குத்பா-நிகழ்த்தப்பட வேண்டும். கதீப்(பிரசங்கி) மிம்பரில் ஏறிய பின்னர் கொடுக்கப்படும் பாங்கே நபிவழி யிலான பாங்காகும். அந்த பாங்கிற்கு முன் னர் பள்ளியில் கூட்டமாகக் கூடி கூட்டு அமல் (இஜ்திமாயி அமல்) செய்வதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள் என்பதை மேலே எடுத்து எழுதியுள்ள ஹதீத் உறுதிப் படுத்துகிறது. ஆனால் இன்றைய மார்க்க அறிஞர்கள் நபி(ஸல்) அவர்களின் கட்ட ளைக்கு முரணாக அசலான பாங்கிற்கு முன் னால் மக்களுக்கு உபதேசம் செய்கிறார்கள். இந்த வகையிலும் இது மார்க்க முரணான ஒரு செயலாகும். ஒரு வகையில் ஜும்ஆ குத்பா-இரண்டு என்பதற்கு முரணாக மூன்று குத்பா-ஆக்குவது; மறுவகையில் ஜும்ஆவிற்கு முன்னர் ஜும்ஆ பாங்கிற்கு முன்னர் கூட்டம் கூட்டி உபதேசம் செய் வது; ஆக இன்றைய மார்க்க அறிஞர்கள் யூத, கிறிஸ்தவ மார்க்க அறிஞர்களைப்

போல் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு முரண்பட்டு நடக்க முற்படுகிறார்களே அல்லாமல் அல்லாஹ்வுக்கு முறையாக அஞ்சி, அல்லாஹ்வின் கட்டளைகளின்படியும், நபி (ஸல்) அவர்களின் நடைமுறைகளின் படியும் அவர்களும் நடப்பதாக இல்லை; மக்களையும் அந்த வகையில் தூண்டுவதாக இல்லை. யூத, கிறிஸ்தவ மார்க்க அறிஞர்கள் (மக்களை) அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுக்கிறார்கள். (9:34) என்று அல்லாஹ் கூறுவதுபோல் முஸ்லிம் மார்க்க அறிஞர்களும் முஸ்லிம்களை அல்லாஹ்வின் பாதையை விட்டும் தடுக்கிறார்கள்.

லுஹரின் 4 ரகாஅத்தில் இரண்டு ரகாஅத்துகளுக்குப் பகரமாக இந்த ஜுமுஆ குத்பா இருக்கிறது. எனவே தொழுகை அரபியில் இருப்பது போல் ஜுமுஆ குத்பாவும்–உபதேசமும் அரபியில்தான் இருக்க வேண்டும் என்ற இந்த மார்க்க அறிஞர்களின் கூற்றும் மிகத் தவறானதாகவே இருக்கிறது. தொழுகை அல்லாஹ்வுக்காக நிறைவேற்றப்படுவது, தொழுகையை இமாமும், முக்ததிகளும் கிப்லாவை நோக்கி நிறைவேற்றுகிறார்கள். தொழுகையில் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட செயல்களையும், அந்தந்த இடத்தில் ஒத வேண்டியதையும் மட்டுமே கடைபிடிக்க வேண்டும். மேலதிகமாக ஒன்றையும் செய்ய முடியாது. உலகின் எந்தப் பகுதியாக இருந்தாலும், எந்த மொழி பேசக்கூடியவர்களாக இருந்தாலும், தொழுகையின் அம்சங்களில் எவ்வித மாற்றத்தையும் பார்க்க முடியாது. உலகளாவிய அளவில் ஒரே சமுதாயம் என்ற பேருண்மையை நிலைநாட்ட வணக்க வழிபாடுகளில் தலைசிறந்த தொழுகையை இன மொழி, கலாச்சாரங்களுக்கு அப்பாற்பட்டு ஒரே மொழியில் நிறைவேற்றுவது சாலச் சிறந்த செயலாகும். முஸ்லிம்கள் எந்த நாட்டினராக எந்த மொழியினராக இருந்தாலும் அல்லாஹ்வின் இறுதி வேதமான குர்ஆனை ஓதவும், அதன் பொருளை விளக்கவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே தொழுகையை அரபி மொழியில் நிறைவேற்றுவது முஸ்லிம்களுக்கு சாத்தியமானதுதான். அவர்களுக்குப் பரிட்சமானதுதான். உலகளாவிய அளவில் ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு அது பெரிதும் உதவவே செய்யும். ஆனால் குத்பா–பிரசங்கம் அப்படிப்பட்ட விஷயமல்ல. மக்கள் விளங்கிச் செயல்படுத்த வேண்டிய அறிவுரைகளாகும். அந்த அறிவுரைகள் அவரவர்களின் தாய்மொழியில் இருப்பதுதான் பலன் அளிக்கும். இந்த மார்க்க அறிஞர்கள் நினைப்பது போல் அரபி மொழியில் இருக்கும் குர்ஆனை விளங்குவது போல், அரபி மொழியில் செய்யப்படும் குத்பாவையும் விளங்கவேண்டும் என்பது நடைமுறைச் சாத்தியமற்றதாகும். அதாவது முஸ்லிம் அனைவரும் அரபி மொழி பேசக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு மடமை நிறைந்ததோ அதேபோல் தான் அரபி குத்பாவையும் மக்கள் விளங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் ஆகும்.

எனவே இன்றைய மார்க்க அறிஞர்கள் வெள்ளிக்கிழமை ஜுமுஆ குத்பாவை–பிரசங்கத்தை அரபியில்தான் செய்யவேண்டும் என்பதற்கு அவர்கள் கூறும் எந்தக் காரணமும் அறிவுக்குப் பொருத்தமாக இல்லை என்பதோடு குர்ஆன், ஹதீத் போதனைக்கு உட்பட்டும் இல்லை என்பதை அவர்கள் விளங்குவார்களாக. எனவே வாரத்தில் ஒரு நாள் கிடைக்கும் அரிய வாய்ப்பான முஸ்லிம் சமுதாயத்திற்குச் சத்தியத்தை எடுத்துச் சொல்லும் நல்ல வாய்ப்பை இந்த மார்க்க அறிஞர்கள் முறையாகப் பயன்படுத்துவார்களாக. ஜுமுஆ குத்பா–பிரசங்கத்தை மக்கள் விளங்கும் வகையில் அவர்களின் தாய்மொழியில் செய்வார்களாக. அதிலும் பெரியார்களின் கட்டுக்கதைகளையும் கப்ஸாக்களையும் அவிழ்த்து விடாமல், அல்குர்ஆனின் கருத்துக்களையும், ஆதாரபூர்வமான ஹதீத்களின் கருத்துக்களையும் மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்து அல்லாஹ்வின் பொருத்தம் பெறுவார்களாக.

# நாளை உச்சியில் கணக்கிடும் ஹிஜிரி கமிட்டி காலண்டர்!

S.H. அப்துர் ரஹ்மான்

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

கி.பி. 1998ல் நாகர்கோவில் நாஸர் அவர்களால் அனுப்பப்பட்ட அறிவியல் அறிஞர் அலி மணிக்பான் அவர்களின் தொடர் முயற்சியால் அந்நஜாத்தில் ஹிஜிரி கமிட்டி காலண்டர் அறிமுகப்படுத்தியதில் இருந்து ஜமாத்தில் முஸ்லிமீனை சேர்ந்த நாம் அனைவரும் 20 வருடங்களுக்கு மேலாக ஹிஜிரி கமீட்டி யின் காலண்டரை பின்பற்றி வருகின்றோம்.

அதன்படி இஸ்லாமிய மாதங்களை கடைப்பிடித்து நோன்புகளும் வைத்து வருகின்றோம். அது தொடர்பான கமீட்டி வெளியீடுகளை படித்தும் வந்தோம்.

கமிட்டி காலண்டரை பின்பற்றியும் பிரச்சாரமும் செய்து வந்த படித்த அறிவியல் அறிந்த சிலர் இதில் இருந்து விலகி சென்றனர். விசாரித்தபோது இது தவறான கணக்கீட்டில் உள்ளது. அது உங்களுக்கு புரியும் போது நீங்களும் விலகிவிடுவீர்கள் என்று கூறி சென்றனர். ஆனால் அப்போது அது எங்களுக்கு புரியவில்லை.

அமீர் அபூ அப்தில்லாஹ்வின் மரணத்திற்கு பின் (அல்லாஹ் அவரை பொருந்தி கொள்வானாக)காலண்டர் போடுவதற்காக அதன் கணக்கீடுகளை சரிபார்க்கும் போது கணக்கீடு லண்டனை முன் நோக்கியதாகவும் நாளின் ஆரம்பம் நள்ளிரவு கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாகவும் உள்ள UTC என்ற உலக நேரத்தை கொண்டு கணக்கிட்டு இருப்பது தெரிய வந்தது.

UTC என்னும் உலக நேரம் குறித்து அறிந்து கொள்ள இணையதளத்தை நாடிய போது ஆங்கிலேயன் கட்டமைத்த உலக

> **... தேதிக்கோட்டில் உள்ளவர்களுக்கு சங்கமம் நிகழும் முன் சங்கம தினத்திலேயே மாதத்தை ஆரம்பிக்கும் தவறு நிகழ்கிறது.**

நேரத்தின் கட்டமைப்பு ஆங்கில தேதிக்கோட்டின் உச்சி முதல் உச்சி வரையாலானது ஒரு நாள் என்ற விளக்கம் கிடைத்தது.

எதற்கு இந்த அமைப்பு என்று பார்த்த போது ஆங்கிலேயர் உலகின் மையமாக அமைத்த லண்டன் கிரின்விட்ச் நள்ளிரவில் இருந்து மறு நள்ளிரவு வரை உள்ளது ஒரு நாள் என்ற கணக்கீட்டிற்காக என்று தெரிய வந்தது.

ஆங்கில தேதிக்கோடு IDL எப்படி கட்டமைக்கப்பட்டது என்று அதன் வரலாற்றை பார்த்தபோது அதில் அதிர்ச்சி அடையும் படி ரஷ்யாவுடன் வெள்ளிக்கிழமையில் இருந்த அலாஸ்கா ஒரு கிழமை குறைக்கப்பட்டு வியாழக்கிழமையில் உள்ள அமெரிக்காவுடன் இணைக்கப்பட்டு அதன் பின்பு தான் ஆங்கிலேயர் தேதிக்கோடு போடப்பட்டு உள்ளது என்பது தெரியவந்தது. இதன் மூலம் தான் இயற்கை மையமாக இருந்த மக்கா 1867ல் அலாஸ்கா இடமாற்றம் மூலம் லண்டன் உலகின் மையப்படுத்தப்பட்டது தெரியவந்தது.

இதுகுறித்த தகவல்கள் தெரிந்துகொள்ள ஹிஸ்டாரிக் ஆல்டரேசன் ஆப் டேட் லைன் (Historic Alterations of Date Line) என்ற தேடல் மூலம் இணையதளத்தில் பார்வை இடலாம். அலாஸ்காவில் கிழமை மாற்றம் செய்தபின் ஆங்கிலேயன் போட்ட IDL என்ற உலக தேதிக்கோட்டையும், லண்டனை முன்நோக்கி நாளின் ஆரம்பம் நள்

ளிரவை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்பட்ட UTC என்ற உலக நேரத்தையும் எப்படி இஸ்லாமிய அடிப்படையாக ஏற்று, அதனை வைத்து ஆங்கில அடிப்படையில் கணக்கிட்ட ஹிஜிரி காலண்டரை ஏற்க முடியாது என்று முடிவு செய்தோம்.

எனவே மக்காவை முன்நோக்கி நாளின் ஆரம்பம் ஃபஜ்ரை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்பட்ட IUT என்ற இஸ்லாமிய உலக நேரத்தையும் அடிப்படையாக வைத்துக் கணக்கிட கமிட்டியிடம் வேண்டுகோள் வைத்தோம். அவ்வாறு போட முடியாது, போட்டால் சில மாதம் 31 நாள் வந்து விடும். தற்போதுதான் மக்கள் காலண்டர் கான்செப்ட்டை ஏற்க ஆரம்பித்து உள்ளனர். இதுகுறித்து பேசினால் விரண்டு ஓடி விடுவார்கள் என்று கமிட்டியினர் சமாதானம் கூறினார்கள்.

ஆங்கிலேயன் செய்த தவறுகளை ஏற்றுக் கொள்ள வேண்டுமா? என்று கேட்டபோது முடிந்தால் 5 வருட காலண்டரை நீங்கள் கூறும் அடிப்படையில் தயாரித்து காட்டுங்கள் என்று கமீட்டி கேட்டது. நாம் அதனையும் தயாரித்து தந்தோம்.

கமிட்டி அதை எந்தக் காரணமும் கூறாமல் அதில் எந்த தவறுகளையும் சுட்டி காட்டாமல் ஏற்க மறுத்துவிட்டது உடன் நமக்குள் ஆலோசனை கூட்டம் நடத்தி ஜமாத்தில் முஸ்லிமீன் சார்பாக புதிய காலண்டர் வெளியிட முடிவு செய்யப்பட்டது. அது ஹிஜ்ரி 1442ல் வெளியானது.

**ஹிஜ்ரி கமிட்டி காலண்டரில் உள்ள தவறுகள்:**

1. தேதிக் கோட்டில் உள்ளவர்கள் சங்கமம் நிகழும் முன் சங்கம தினத்திலேயே மாதத்தை ஆரம்பிக்கும் தவறு நிகழ்கிறது.

2. நபி(ஸல்) அவர்கள் வெள்ளை நாள் 13,14,15 என்று கூறியிருக்க இந்த காலண்டரில் 16ம் நாளில் வெள்ளை நாள் 14UT மேல் சங்கமம் நிகழும் மாதங்களில் வருகிறது.

3. ஹஜ்ஜத்துல் விதா அரஃபா நாள் வெள்ளிக்கிழமையில் நிகழ்ந்ததாக ஹதீத்கள் பல இருக்க இவர்கள் காலண்டர்படி வியாழன் கிழமையில் வருகிறது. இவை அனைத்தும் மக்காவை முன்னோக்கி பஜ்ரில் இருந்து ஆரம்பம் ஆகும் IUTஐ பயன்படுத்தி கணக்கிடும்போது இந்த தவறுகள் வருவது இல்லை.

பூமியில் 12UTC ஆகும்போதே புதிய நாள் ஆங்கில தேதிக்கோடு பிஜியில் புதிய நாள் பிறந்து விடுகிறது. ஆனால் பலரும் 24UTC முடியும்போதுதான் புதிய நாள் பிறப்பதாக எண்ணிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த மக்களின் அறியாமை கமிட்டியினருக்கு நல்ல வாய்ப்பாக ஆகிவிட்டது. 0UTCல் நாள் ஆரம்பித்து 24UTCல் முடிவதாக கூறித் திரிகின்றனர்.

**ஆங்கில உலக நேரம் UTC என்பது லண்டனை மையமாக வைத்து அதை முன்னோக்கி ஆங்கில தேதிக்கோட்டின் உச்சி முதல் உச்சி வரையிலான நேரம் 0 UTC முதல் 24UTC வரை.**

**இஸ்லாமிய உலக நேரம் IUT என்பது மக்காவை மையமாக வைத்து அதை முன்னோக்கி இயற்கை தேதிக்கோட்டின் ஃபஜ்ர் முதல் ஃபஜ்ர் வரையிலான நேரம் 0IUT முதல் 24IUT வரை.**

இதில் எது இஸ்லாமிய அடிப்படை என்று நீங்களே சிந்தித்து முடிவு எடுங்கள்.

ஆங்கில IDLல் கிப்லா மாறுவதாக கமிட்டி சொல்லி வந்தது அவர்கள் சொன்னபடி மாறவில்லை என்பதும் நிரூபணமானது. இவ்வளவு பிழை இருந்தும், இதற்கு மேலும் கமிட்டி காலண்டரை பின்பற்றுபவர்கள், தங்களை மாற்றிக் கொள்வது நல்லது; சரியானதை அடைந்து கொள்ள இறைவன் அருள்புரிவானாக.

# நபி வழி நடந்தால் நரகமில்லை!

அஹமது இப்ராஹிம்

எழுதப் படிக்கத் தெரியாத உம்மி சமுதாயம் என்பது உலக மாந்தரை நேர் வழிக்கு இட்டுச் சென்ற சத்திய ஸஹா பாக்களேயாவர்.

அவன்தான், எழுத்தறிவில்லாத மக்க ளிடம் அவனுடைய வசனங்களை ஓதிக் காட்டி, அவர்களைப் பரிசுத்தமாக்கி, அவர்களுக்கு வேதத்தையும், ஞானத் தையும் கற்பிக்கும்படியான தூதரை அவர்களிலிருந்தே அனுப்பி வைத்தான். அவர்களோ, அதற்கு முன்னர் பகிரங்க மான வழிகேட்டிலேயே இருந்தனர். (அல்குர்ஆன் : 62:2)

தற்போதைய முஸ்லிம்கள் முகல் லிதுகள் எனப்படும் (ஆலிம்களையும், மூதாதையர்களையும் கண்மூடிப் பின் பற்றும்) அப்பாவிகளாவர்.

என்னதான் அப்பாவிகள் என்றா லும், நேர்வழி தவறினால் அதற்கான கூலி நரகமே.

ஏனெனில் அப்பாவிகளிலேயே மிக வும் அப்பாவி நபி(ஸல்) அவர்களின் தந்தையான அப்துல்லாஹ் அவர்களே. ஆனாலும் அவர் தங்களின் தலைவர் களான தாருந் நத்வா என்ற ஜமாஅத்துல் உலமா சபை ஆலிம்களையும், தங்க ளுடைய பெரியார்களையும், மூதாதை யர்களையும் கண்மூடிப் பின்பற்றிய கார ணத்தினால் நபி(ஸல்) அவர்களின் தந்தையான அப்துல்லாஹ் அவர்கள் நற் பண்புள்ளவராக இருந்திருந்தும் நரகத் திற்கு உரியவரானார். ஆதாரம் : கீழே.

அனஸ்(ரழி) அவர்கள் கூறியதாவது :

ஒரு மனிதர் (நபி(ஸல்) அவர்களி டம்) 'அல்லாஹ்வின் தூதரே! (இஸ்லாத் திற்கு முன் இறந்துவிட்ட) என் தந்தை எங்கே இருக்கிறார்?' என்று கேட்டார்.

**... 'என் தந்தையும் உன் தந்தையும் (நரக) நெருப்பில்தான் (இருக்கி றார்கள்)' என்று கூறினார்கள்.**

அதற்கு நபி(ஸல்) அவர்கள், 'நரக நெருப் பில்' என்று பதிலளித்தார்கள். அவர் திரும்பிச் சென்றபோது அவரை நபி(ஸல்) அவர்கள் அழைத்து, 'என் தந்தையும் உன் தந்தையும் (நரக) நெருப்பில்தான் (இருக் கிறார்கள்)' என்று கூறினார்கள். முஸ் லிம் : 347, அத்தியாயம் : 1, இறை நம்பிக்கை.

எனவே எனது அன்பான இஸ் லாமிய சகோதரர்களே, சகோதரிகளே!

நரகத்திற்கு வழிகாட்டும் அனைத்து மத்ஹபுகளையும் அதுபோன்ற இஸ் லாமிய பெயர் தாங்கிய தவ்ஹீது இயக்க பிரிவுகளையும், இதுபோன்ற இஸ்லா மிய பெயர் தாங்கிய பிரிவு இயக்கங்க ளையும் விட்டு நீங்கி எல்லாம் வல்ல அல் லாஹ் நமக்கு சூட்டிய பெயரான அல் முஸ்லிமீன் (ஆதாரம்:அல்குர்ஆன் 22:78) என்ற பெயரிலேயே ஒரே அமீரின் கீழ் ஒரே ஜமாஅத்தாக ஒன்றிணைந்து அல் குர்ஆன் மற்றும் நபிவழியின் அடிப் படையில் ஒரே சமுதாயமாக செயல்படு வோமேயானால் நமது ஆதரவு இல்லா மல் மத்திய மாநில ஆட்சியில் எக்கட்சி யும் ஆட்சி அமைக்க முடியாது.

எனவே அந்த மாதிரியான அல்முஸ் லிமீன் என்ற ஒரே ஜமாஅத்தாக செயல் பட்டு இம்மை மறுமை வெற்றியைப் பெற தங்களனைவரையும் அன்போடு அழைக்கின்றேன். எல்லாம் வல்ல அல் லாஹ் நம் அனைவருக்கும் அத்தகைய பாக்கியத்தை தந்தருள் புரிவானாக. ஆமீன்.

# திருக்குர்ஆனை விளங்கி படிக்க வேண்டாமா?

**மறு பதிப்பு :**

ஷாஹூல் ஹமீது

நபி(ஸல்) அவர்கள் இறுதி (ஹஜ்) யாத்திரையின் போது பேசிய குத்பா உரையின் முக்கிய குறிப்பு:

நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள்: 'நான் இரண்டு விஷயங்களை விட்டுச் செல்கிறேன்; அதை என் உம்மத்தாகிய நீங்கள் பற்றிப் பிடித்துக் கொண்டீர்களேயானால் நீங்கள் எப்போதும் வழிதவறி செல்லமாட்டீர்கள்; அது குர்ஆன் மற்றும் என் சுன்னத்தான வழிமுறைகள்'. அல்முஅத்தா, பாகம் 46, எண்3.

இந்த ஹதீதில் நபி(ஸல்) அவர்கள் முதலில் திருக்குர்ஆனை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார்கள். அதன் கருத்து என்னவென்றால் திருமறையில் கூறியுள்ளபடி நம் வாழ்வில் நடந்தால் எவரும் வழிதவறிச் செல்லமாட்டீர்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். அதற்கு நாம் முதலில் திருக்குர்ஆனை விளங்கி கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்கு மாறாக நாம் விளங்காமல் அல்லது விளங்க முயற்சிக்காமல் விட்டுவிட்டால் கண்டிப்பாக வழிதவறி விடுவோம் (அல்லாஹ் நம்மை காப்பாற்றுவானாக) என்பதில் ஐயமில்லை.

இம் மேற்குறிப்பிட்டுள்ள ஹதீதின்படி நடக்க முயன்றால் நபி(ஸல்) அவர்களின் சுன்னத்தை கடைப்பிடித்த நன்மையும் நமக்கு கிடைத்துவிடும்.

**குர்ஆன் என்றால் என்ன?**

நாம் குர்ஆனைப் படிப்பதற்குமுன் முதலில் 'குர்ஆன்' என்ற சொல்லுக்கு பொருள் விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

'குர்ஆன்' என்றால் 'ஓதுதல்' என்று பொருள்; 'ஓதுதல்' என்ற தமிழ்ச் சொல் 'படித்தல்', 'வாசித்தல்' என்ற சொற்களிலிருந்து சிறிதளவு வித்தியாசப்படுகிறது. அதாவது 'வாசித்தல்' என்றால் விளங்காமல் படிப்பது, (நம்மில் சிலர் குர்ஆனை விளங்காமல்தான் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் வருந்த வேண்டிய விஷயமாகும்)

**...திருக்குர்ஆனை நாம் விளங்கிப் படிக்காமல் எப்படி மார்க்க நெறிப்படி இவ்வுலகில் வாழமுடியும்?**

அடுத்து 'படித்தல்' என்றால் விளங்கி படிப்பது; ஆனால் 'ஓதுதல்' என்றால் விளங்கி படித்து அதன்படி நடத்தல் என்று பொருளாகும். ஆகையால் 'குர்ஆன்' என்பதற்கு 'ஓதுதல்' என்று குறிப்பிடுகிறார்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு முதன் முதலில் 'வஹி' இறங்கியபோது கூறப்பட்ட வார்த்தை ஓதுவீராக! என்பதாகும். திருமறையில் 96:1-5 பார்க்கவும். திருமறையை விளங்கி தான் படிக்க வேண்டும் என்று அல்லாஹ்வே மறையில் குறிப்பிட்டுள்ளான்.

'மனிதர்கள்' அறிவுரை பெறுவதற்காக நிச்சயமாக நாம் இக்குர்ஆனை மிகவும் எளிதாக்கி வைத்திருக்கின்றோம். ஆகவே அறிவுரை பெறுவோர் எவரும் உண்டா?

திருக்குர்ஆன் 54:17,22,32,40

ஒரே அத்தியாயத்தில் நான்கு முறை வலியுறுத்திக் கூறியுள்ளான். அதேபோல் மற்றும் ஓர் அத்தியாயத்தில் அல்லாஹ் நம்மை பார்த்துக் கேட்கிறான்! 'இத்திருமறையைப் பற்றி சிந்திக்க வேண்டாமா? (ஆராய்ந்துப் பார்க்க வேண்டாமா?) உங்களுடைய இருதயங்கள் தாழிடப்பட்டுள்ளதா?'

திருக்குர்ஆன் 47:24

அல்லாஹ் நமக்கு அறிவையும், சிந்தித்து செயல்படக்கூடிய திறமையையும் தந்துள்ளான். அதை நாம் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? என்று நம்மை கேட்கிறான்.

இந்த திருக்குர்ஆனை நாம் விளங்கிப் படிக்காமல் எப்படி மார்க்க நெறிப்படி இவ்வுலகில் வாழமுடியும்?

**திருக்குர்ஆன் ஓதுவதின் பயன்கள்:**

இந்த திருமறையை ஓதுவதினால் நாம் நேரான பாதையை விளங்கி கொள்ள முடி

யும் என்று அல்லாஹ் தன் மறையில் குறிப்பிட்டு உள்ளான். 'நிச்சயமாக இந்தக் குர்ஆன், (மனிதர்களுக்கு) நேரான வழியை அறிவிக்கின்றது. திருக்குர்ஆன் 17:9

உங்கள் வீடுகளில், குடும்பத்தினர்களுக்கு திருகுர்ஆனை விளக்கி கற்றுக் கொடுங்கள் என்றும் இறைவன் கட்டளையிட்டுள்ளான். 'உங்கள் வீடுகளில்' ஓதப்பெறும் அல்லாஹ்வுடைய வசனங்களை நினைவில் வையுங்கள். (அவற்றைக் கொண்டு நல்லுணர்ச்சி பெறுங்கள்). திருக்குர்ஆன் 33:34

நம் குடும்பத்தினர்களுக்கு விளக்கி சொல்லிக் கொடுப்பதால் நாம் அனைவரும் நேரான வழியை அடைவோம். அல்லாஹ்வுடைய பொருத்தம் நமக்கு கிடைக்கும்.

நாம் திருமறையை அதிகமாக ஓதுவதினால் நம் மனதில் எழுகின்ற, தவறான எண்ணங்கள் பொறாமை, பாசாங்கு, கர்வம் மிகுந்திருத்தல், மனக்குரோதம் போன்ற தீய குணங்களை நீக்கக்கூடிய ஆற்றல் உள்ளது என்று இறைவன் தன் திருமறையில் தெள்ளத் தெளிவாக கூறியுள்ளான்.

'மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து ஓர் அறிவுரை உங்களிடம் திண்ணமாக வந்திருக்கிறது; இது இதயங்களில் உள்ள நோய்களைக் குணப்படுத்தக் கூடியதாகவும், தன்னை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களுக்கு வழிகாட்டக் கூடியதாகவும், ஓர் அருட்கொடையாகவும் திகழ்கின்றது'

திருக்குர்ஆன் 10:57

நாம் திருமறையை ஓதுவதினால் நம்முடைய நம்பிக்கை அதிகரிக்கும் நமக்கு இறைவன் மேல் உறுதி அதிகரிக்கும்போது நம்மில் உள்ள தவறுகள் குறைவதற்கு வழி வகுக்கிறது. அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான். '...மேலும், அவனுடைய வசனங்கள் அவர்கள் முன் ஓதப்பட்டால் அவர்களுடைய நம்பிக்கை அதிகமாகிவிடும். மேலும், அவர்கள் தங்களுடைய இறைவனையே முழுவதும் சார்ந்திருப்பார்கள்'. திருக்குர்ஆன் 8:2

நாம் அனைவரும் திருமறையை விளங்கி படித்து நன்மைகளை அதிகரிக்க முயற்சி செய்யவேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் மறுமையில் இறைவனிடம் அவர்களின் உம்மத் இத்திருக்குர்ஆனை அலட்சியப்படுத்திவிட்டார்கள் என்று சாட்சி கூறுவார்கள் என்று திருமறையில் இறைவன் கூறிக் காண்பிக்கிறான்.

'மேலும், இறைத்தூதர் கூறுவார்: 'என் இறைவா! என் சமூகத்தைச் சார்ந்த மக்கள் இந்த குர்ஆனை நகைப்புக்குரியதாக்கிக் கொண்டிருந்தார்கள். திருக்குர்ஆன் 25:30

இவ்வசனத்தில் சொல்லப்பட்டுள்ள மனிதர்கள் எத்தகையவர்கள் என்றால் இத்திருமறையை விளங்கி படிக்காமல் இவ்வசனங்களை நடைமுறைப்படுத்தாமல் இருப்பவர்களைக் குறிக்கின்றது. இதுபோன்ற மனிதர்களிடம் சென்று இத்திருவசனங்களை நடைமுறைப்படுத்த கூடாதா? என்று கேட்டால் இவர்கள் சொல்லும் ஒரே பதில், 'இந்த காலத்திற்கு இதெல்லாம் முடியாத காரியம்' என்று கூறுவார்கள். இறைவன் தான் நம் சமூகத்தை காப்பாற்ற வேண்டும்.

நாம் வாழும் இன்றைய சூழ்நிலையில் பலவிதமான குழப்பங்களும், குழப்பவாதிகளும் மலிந்துவிட்டனர்.

இத்தகைய குழப்பங்களும், குழப்பவாதிகளும் ஒன்றும் அறியாத அப்பாவி மக்களை தவறான பாதையில் வழிநடத்திச் சென்று கொண்டிருக்கிறார்கள். இத்தகைய அபாயகரமான நிலையில் நாம் வழிதவறாமல் நேரான பாதையில் நடக்கவேண்டுமென்றால் இத்திருகுர்ஆன் என்ற கையிற்றை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நபி(ஸல்) அவர்கள் சொன்னது போன்று நீங்கள் ஒரு போதும் வழிதவறிச் செல்லமாட்டீர்கள்.

'(நபியே!) நாம் மனிதர்கள் அனைவருக்காகவும் சத்தியத்துடனான இந்த நெறிநூலை உம்மீது இறக்கியிருக்கின்றோம். இனி யாரேனும் நேரிய வழியில் நடந்தால் அது அவருக்கே நன்மை தரும்.

யாரேனும் வழி தவறினால், வழி தவறிய தன் தீய விளைவு அவரையே சாரும். நீர் அவர்களுக்குப் பொறுப்பாளர் அல்லர்'

திருக்குர்ஆன் 39:41

'சத்தியம் வந்துவிட்டது; அசத்தியம் அழிந்துவிட்டது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்!' திருக்குர்ஆன்: 17:81

# எது பெண்ணுரிமை?

ப.அ. இம்தியாஸ் அஹ்மத்

**ஆணுக்குப் பெண் எந்த விதத்திலும் சளைத் தவள் இல்லை!**

ஆணும் பெண்ணும் சமம்! என்று கோஷங்களை எழுப்பும் இந்த நூற்றாண் டில் பெண்ணுரிமை என்னவென்றால்:

❖ ஆண் உடம்பை மறைக்கும் ஆடை அணிவதும், பெண்; தன் உடம்பை எள்ளளவு; மறைக்காத உடையை!! மிகச் சிறியதாக அணிவதும்!

❖ அழகிப் போட்டி என்னும் பெயரில் பெண்களை, அரை நிர்வாணம் ஆக்கி, அவளை ஒரு கவர்ச்சிப் பொருளாக்கி தம் காமப் பசியை, கலையென்ற போர் வையில் பெண்களை கேவலப்படுத்து வதும்;

❖ சோப்பு, ஷாம்பு போன்ற விளம்பரங் களில் பெண்களை மிகக் கண்ணியமாக(?) சிறப்பிப்பது தான் பெண்ணுரிமை யெனில் இந்த கேடுகெட்ட பெண் உரிமை!!! தேவைதானா? இந்த நாகரீக உலகில் பெண்கள் அடைந்த முன்னேற் றம் இதுதான்;

**திருமணம் ஆகாத தாய்கள்!**

**தந்தையை அறியாத குழந்தைகள்!**

**தகர்ந்து போன குடும்பங்கள்!**

**தற்கொலைகள்!**

**பாலியல் குற்றங்கள்!**

**பாதிக்கப்பட்ட மனோ நிலைகள்!**

மக்களை மதியற்ற மாக்களாக்கும் 'இந்த' நவநாகரீகம் பெண்களுக்குத் தேவையா? சிந்திப்பீர்!!

இந்த நெறிகெட்ட 'நாகரீக' சமுதாயம் இஸ்லாத்தின் மீது சுமத்தும் ஆதாரமற்ற பழி. 'இஸ்லாம் பெண்ணுரிமையை மறுக்கிறது' என்பதே! இது உண்மையா?

**இஸ்லாத்தில் பெண் உரிமை!**

இஸ்லாம் பெண்களுக்கு அளித்துள்ள வானளாவிய உரிமையைப் போல் இதுவரை மட்டும் அல்ல, இனிமேலும், எந்த சமூகத் தாலும், அளிக்க முடியவே முடியாது!

> **...பெண்களுக்கு சம்பாதிக்க உரிமை அளித்து அவர்களுடைய பணத்தின் உரிமை, அவர்களுக்கே! என பொரு ளாதார சுதந்திரம் அளித்த முதல் மார்க்கம் இஸ்லாம்.**

**பெண் குழந்தையே பேறு!**

இன்றைய 'நவநாகரீக' உலகில் பெண் பிறந்தால் பாரம் எனக் கருதி பிறக்கும் முன் னும், பிறந்த பின்னும் படுகொலை செய்யும் பாதகம் பரவலாக இருக்கிறது. ஆனால் இஸ்லாத்தில்...

"எவருக்கேனும் ஒரு பெண் பிள்ளை இருந்து அந்தப் பெண் குழந்தையை அவர் உயிருடன் புதைக்காமலும், அவளை இழிவு படுத்தாமலும், அவளைவிட தன் ஆண் பிள்ளையை உயர்வாக கருதாமல் இருக்கின் றாறோ, அவரை, அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைவிப்பான். அல்ஹதீத்:அஹ்மத், ஹதீத் எண்:1957

இஸ்லாம் பெண் குழந்தை பிறந்தால் அதை பாக்கியமாக கருதவேண்டும் என வலியுறுத்துகிறது. பெண் குழந்தை, பிறந் தால் அதை பாக்கியமென வலியுறுத்துவது பெண் உரிமையா? அல்லது அவசியமற்ற நிலையில் 'அபார்ஷன்' என்ற பெயரில் பெண் சிசுக்களை கொலை செய்வது பெண் ணுரிமையா? அறிவுடையோரே! சிந்திப்பீர்!

**இஸ்லாத்தில் கல்வி உரிமை!**

இன்றைய 'நாகரீக உலகில், ஆண் பிள் ளையை படிக்கவைக்க பணம் சேருங்கள், பெண் பிள்ளையை கல்யாணம் செய்து வைக்க பணம் சேருங்கள்! என்று அரசாங்க வங்கிகளே அழைப்பு விடுக்கின்றன.

ஆனால் உண்மை நாகரீகமாகிய இஸ்லாம், கல்வியைக் கற்பது ஒவ்வொரு முஸ்லிம்களுக்கும் (ஆண்,பெண்) கடமை யாகும். ஹதீத் : பைஹகீ

என கல்வியை இருபாலாருக்கும் பொது வாக்கி கடமையாகவும் வைத்திருக்கிறது.

**கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை:**

பெண்களை யாரும் கட்டாயப்படுத்தி கல்யாணம் செய்ய இஸ்லாம் அனுமதிப்பது இல்லை!

இப்னு அப்பாஸ்(ரழி) அறிவிக்கிறார் கள்: ஒரு முறை ஒரு பெண் நபி(ஸல்) அவர் களிடம் வந்து, தன் தந்தை, தன்னுடைய விருப்பமின்றி திருமணம் செய்து விட்ட தாக முறையிட்டார்கள். அதற்கு இறைத் தூதர் அந்த பெண்ணுக்கு அந்த திருமணத்தை ஏற்றுக் கொள்ளவோ அல்லது, நிராகரித்தி டவோ வாய்ப்பை அளித்தார்கள்.

அல்ஹதீத், அஹ்மத், ஹதீத் எண்: 2469

**ஆணே வரதட்சணை கொடுக்க வேண்டும்!**

இஸ்லாம், பிற சமுதாயத்தினர் செய் வது போல் பெண்ணிடம் வரதட்சணை வாங்குவதை உறுதியாக தடை செய்துள் ளது. அதற்கு மாறாக, ஆண்தான் 'மஹர்' எனும் வரதட்சணை தந்து மணக்க வேண் டும். அந்த 'மஹர்' பணத்தை அவள் ஒரு போதும் தன் கணவனுக்கோ, மகனுக்கோ கொடுக்க வேண்டியதில்லை.

'மேலும் பெண்களுக்கு அவர்களுக்கு உரிய மஹரை (கடமை எனக் கருதி) மனம் உவந்து அளித்து விடுங்கள்!' அல்குர்ஆன் 4:4

**கணவன்-மனைவி இடையே பாகுபாடு இல்லை!**

'அவர்கள் (உங்கள் மனைவியர்) உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடை யாகவும் இருக்கின்றீர்கள்'. அல்குர்ஆன் 2:187

ஆடை எவ்வாறு மானத்தை மறைத்து அணிபவருக்கு கண்ணியத்தையும் அளிக்கி றதோ அதேபோன்று மனைவியும், கணவ னும் ஒருவருக்கொருவர் பாதுகாப்பும் கண் ணியமும் அளிப்பவர்களாக இருக்கின்றனர்.

இஸ்லாம் எவ்வாறு ஒரு ஆண். பெண்ணை விவாகரத்து செய்யும் உரிமை யைத் தந்துள்ளதோ, அதேபோல் ஒரு பெண் தன் கணவனை 'குலாஃ' எனும் விவா கரத்து செய்யவும் இஸ்லாம் உரிமை அளிக்கிறது.

**பெண்களுக்கு சொத்துரிமை:**

'நாகரீக' ஐரோப்பாவில் இருநூறு வரு டங்களுக்கு முன்பு வரை பெண்களுக்கு சொத்துரிமை கிடையாது. ஆனால் 1400 வருடங்களுக்கு முன்னரே பெண்களுக்கு சொத்துரிமையைக் கொடுத்து சிறப்பித்த சீரிய மார்க்கம் இஸ்லாம்!

பெண்களுக்கு சம்பாதிக்க உரிமை அளித்து அவர்களுடைய பணத்தின் உரிமை, அவர்களுக்கே என பொருளாதார சுதந்தி ரம் அளித்த முதல் மார்க்கம் இஸ்லாம்.

மேற்கண்டவற்றில் இருந்து இஸ்லாம் பெண்களின் நிலையை பெண் உரிமையை மிகவும் சிறந்த முறையில் மேம்படுத்தி பெண்களுக்கு சமுதாயத்தில் மரியாதையை யும் நீதியையும், பாதுகாப்பையும் அளித்தி ருக்கிறது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்பதை அறிவுடையோர் யாரும் மறுக்கவே முடியாது!

மேல்நாடுகளாகிய ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஆண்களை விட நான்கு மடங்கு அதிகமான எண்ணிக்கையில் பெண் கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்குக் காரணம் இஸ்லாம் அளிக்கும் பெண்ணுரிமையே!

இஸ்லாம் பெண்ணுக்கு உரிமை அளிப் பதில்லை என்பது போன்ற ஆதாரமற்ற பொய்ப்பிரச்சாரங்களை இனியும் நாம் எதிர் கொண்டு முறியடிப்பதில் ஆண்களை விட பெண்களாகிய நீங்கள் பங்கேற்பது உங்களுடைய தலையாய கடமை மட்டு மின்றி உங்கள் உரிமையும் ஆகும்.

உண்மையான பெண்ணுரிமை காக்க உறுதியுடன் முன்வாருங்கள்!

'சத்தியம் வந்துவிட்டது; அசத்தியம் அழிந்துவிட்டது; நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்' அல்குர்ஆன் 17:81

# இறுதி இறைத்தூதர்(ஸல்) அவர்களின் அரஃபா தினம் வெள்ளிக்கிழமையே!

எம்.எம்.அமீர், நிந்தாவூர், இலங்கை

**...உமர்(ரழி) அவர்கள் 'அவ்வசனம் எந்த நாளில், எந்த இடத்தில் வைத்து நபி(ஸல்) அவர்களின் மீது இறங்கியது என்பதை நாங்கள் அறிவோம். 'அரஃபா பெருவெளியில் ஒரு வெள்ளிக்கிழமை தினத்தில் நபி(ஸல்) அவர்கள் நின்றுகொண்டிருக்கும்போதுதான் (அவ்வசனம் அருளப்பட்டது என்றார்கள்)**

துல்கஃதா மாதத்தில் ஐந்து நாட்கள் எஞ்சியிருந்தபோது மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள் :

ஆயிஷா(ரழி) அறிவித்தார்: நாங்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களுடன் துல்கஃதா மாதத்தில் ஐந்து நாட்கள் எஞ்சியிருந்தபோது (துல்கஃதா பிறை 25ல்) புறப்பட்டோம். அப்போது நாங்கள் ஹஜ்ஜை மட்டுமே நிறைவேற்ற எண்ணியிருந்தோம். மக்காவை நாங்கள் நெருங்கியபோது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், குர்பானிப் பிராணியைத் தம்முடன் கொண்டு வராதவர்கள் கஃபாவை வலம் வந்து ஸஃபா, மர்வாவுக்கிடையே ஓடி முடித்ததும் இஹ்ராமிலிருந்து விடுபட்டு விடும்படி உத்தரவிட்டார்கள். தாமும் இஹ்ராமிலிருந்து விடுபட்டார்கள். பிறகு (ஹஜ்ஜுக்காக மற்றொரு இஹ்ராம் அணிந்து கொண்டார்கள்) பிறகு, நஹ்ருடைய (துல்ஹஜ் 10ம்) நாளில் எங்களிடம் மாட்டிறைச்சி கொண்டுவரப்பட்டது. நான், 'இது என்ன?' என்று கேட்டேன். மக்கள், 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள், தமது மனைவியின் சார்பாக (தியாகப் பிராணியை) அறுத்து பலியிட்டார்கள்' என்று பதிலளித்தார்கள். புகாரி:2952,1709,1720,1638, அத்தியாயம்: 56, அறப்போரும் அதன் வழிமுறைகளும், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரழி) புகாரி : 1545, அத்தியாயம்:25, ஹஜ்.

**துல்ஹஜ் பிறை ஐந்தாம் நாள் மக்காவை சென்றடைந்தார்கள். உம்ராவையும் நிறைவேற்றினார்கள் :**

அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரழி) அறிவித்தார்: நபி(ஸல்) அவர்கள் எண்ணெய் தடவித் தலைசீவி வேட்டியும், துண்டும் அணிந்து தம் தோழர்களோடு மதீனாவிலிருந்து (இறுதி ஹஜ்ஜுக்குப்) புறப்பட்டார்கள். உடல் மீது ஒட்டிக்கொள்ளும் அளவு குங்குமப்பூ தோய்க்கப்பட்ட ஆடையைத் தடை செய்தார்களேயன்றி வேட்டி, துண்டு அணிவதைத் தடுக்கவில்லை. துல்ஹுதைஃபாவிற்குக் காலை நேரத்தில் வந்தடைந்தார்கள். பிறகு தமது வாகனத்தில் ஏறியமர்ந்து பய்தா எனும் (குன்றுப்) பகுதியின் சமதளத்தை அடைந்ததும் அவர்களும் அவர்களின் தோழர்களும் இஹ்ராம் அணிந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் தமது ஒட்டகத்தில் அடையாளமாகச் சிலவற்றைத் தொங்க விட்டார்கள். இந்நிகழ்ச்சி துல்கஃதாவில் ஐந்து நாட்கள் மீதமிருக்கும்போது நடந்தது.

துல்ஹஜ் ஐந்தாம் நாள் மக்கா சென்றடைந்தபோது கஃபாவை வலம் வந்து ஸஃபா மர்வாவிற்கு மத்தியில் ஓடினார்கள். (உம்ராவை முடித்தாலும்) அவர்கள் குர்பானியின் ஒட்டகத்தைத் தம்மோடு கொண்டு வந்ததனால், (தலைமுடி களைந்து) இஹ்ராமிலிருந்து விடுபடவில்லை. பிறகு ஹஜ்ஜுக்கு இஹ்ராம் அணிந்த நிலையில் மக்காவின் மேற்பகுதி ஹஜூன் எனும் மலையில் இறங்கினார்கள். மக்கா வந்ததும் கஃபாவை வலம் வந்தவர்கள் அரஃபாவிலிருந்து திரும்பிய பின்னரே மீண்டும் கஃபாவிற்கு வந்தார்கள். இதற்கு இடையில் கஃபாவை நெருங்கவில்லை. தம் தோழர்களுக்குக் கஃபாவை வலம் வரவும் ஸஃபா, மர்வாவில் ஓடவும், பிறகு தலைமுடியைக் குறைக்கவும் இஹ்ராமிலிருந்து விடுபடவும் கட்டளையிட்டார்கள். இது தம்மோடு குர்பானிக்கான ஒட்டகங்களைக் கொண்டு வராதவர்களுக்குச்

சொல்லப்பட்டதாகும். இவர்களில் மனைவியோடு வந்தவர்கள் உடலுறவு கொள்வது, நறுமணங்கள், (வண்ண) ஆடைகள் அணிவது ஹலாலாகும். புகாரி: 1545. அத்தியாயம் 25, ஹஜ்.

**துல்ஹஜ் பிறை எட்டில் மறுபடி இஹ்ராம் அணிந்து மினா சென்றார்கள்:**

நபி(ஸல்) அவர்கள் துல்ஹஜ் பிறை எட்டில் இஹ்ராம் அணிந்து தமது வாகனத்தில் ஏறி மினா சென்று லுஹர், அஸர், மஃரிப், இஷா, ஃபஜ்ர் என ஐந்து நேரத் தொழுகைகளை அங்கு தொழுதார்கள். (அனஸ்பின் மாலிக்(ரழி), ஜாபிர்(ரழி), இப்னு உமர்(ரழி), அதாஃ(ரஹ்), அபுல் ஸுபைர்(ரஹ்), உபைத் பின் ஜுரைஜ்(ரஹ்) அப்துல் அஸீஸ் பின் ருஃபை(ரஹ்), புகாரி: பாகம் 2, பக்கம்:379, பாடம் 82, பக்கம் 380, பாடம் 83, 1763, 1764, 1653, 1654)

**துல்ஹஜ் பிறை ஒன்பதில் அரஃபா சென்றார்கள்:**

நபி(ஸல்) அவர்கள் துல்ஹஜ் பிறை எட்டில் இஹ்ராம் அணிந்து தமது வாகனத்தில் ஏறி மினா சென்று லுஹர், அஸர், மஃரிப், இஷா, ஃபஜ்ர் என ஐந்து நேரத் தொழுகைகளை அங்கு தொழுதார்கள். ஃபஜ்ர் தொழுகைக்குப் பின்னர் சூரியன் உதயமாகி சிறிது நேரத்திற்குப் பின்னர், (துல்ஹஜ் பிறை ஒன்பதாவது நாள்) அரஃபா நோக்கிப் பயணமானார்கள். (அனஸ்பின் மாலிக்(ரழி), ஜாபிர்(ரழி), இப்னு உமர்(ரழி), அதாஃஹ்(ரஹ்), அபுல் ஸுபைர்(ரஹ்), உபைத் பின் ஜுரைஜ்(ரஹ்), அப்துல் அஸீஸ் பின் ருஃபை(ரஹ்), புகாரி:பாகம்2, பக்கம் 379, பாடம் 82, பக்கம் 380, பாடம் 83, 1763, 1764,1653,1654)

**நடுப்பகல் நேரம் தாண்டியதும் தனது கஸ்வா ஒட்டகத்தில் அமர்ந்தார்கள்:**

நபி(ஸல்) அவர்கள் துல்ஹஜ் பிறை எட்டில் இஹ்ராம் அணிந்து தமது வாகனத்தில் ஏறி மினா சென்று லுஹர், அஸர், மஃரிப், இஷா, ஃபஜ்ர் என ஐந்து நேரத் தொழுகைகளை அங்கு தொழுதார்கள். ஃபஜ்ர் தொழுகைக்குப் பின்னர் சூரியன் உதயமாகி சிறிது நேரத்திற்குப் பின்னர் (துல்ஹஜ் பிறை ஒன்பதாவது நாள்) அரஃபா நோக்கிப் பயணமானார்கள். அரஃபாவில் 'நமிரா' என்ற இடத்தில் அவர்களுக்காகக் கூடாரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அக்கூடாரத்தில் சூரியன் நடுப்பகலைத் தாண்டும் வரை தாமதித்திருந்தார்கள். நடுப்பகல் நேரம் தாண்டியவுடன் தனது கஸ்வா ஒட்டகத்தைத் தயார்படுத்தச் செய்து அதில் ஏறி பயணித்து 'பத்னுல் வாதி' என்ற இடத்திற்கு வந்தார்கள். அங்கு நபி(ஸல்) அவர்களைச் சுற்றி ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் அல்லது ஒரு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரம் நபித்தோழர்கள் ஒன்று கூடியிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் நின்றுகொண்டு உரையாற்றத் தயாரானார்கள். (அனஸ்பின் மாலிக்(ரழி), ஜாபிர்(ரழி), இப்னு உமர்(ரழி), அதாஃ(ரஹ்), அபுல் ஸுபைர்(ரஹ்), உபைத் பின் ஜுரைஜ்(ரஹ்), அப்துல் அஸீஸ் பின் ருஃபை(ரஹ்), புகாரி பாகம் 2, பக்கம் 379, பாடம் 82, பக்கம் 380, பாடம் 83, 1763,1764,1653,1654, அர்ரஹீக் அல்மக்தூம், 558-564) பேருரையின் இறுதியில்:

இதோ! இங்கு வந்தவர்கள் வராதவர்களுக்கு நான் சொன்ன கட்டளைகளை அறிவித்துவிடுங்கள். ஏனெனில், இச்செய்தி எவரிடம் தெரிவிக்கப்படுகிறதோ அவர், தாம் யாரிடமிருந்து இதைக் கேட்டாரோ அவரைவிட அதாவது தமக்கு இதைச் சொன்னவரை விட நன்கு புரிந்து விளக்கமுடையவர்களாக பாதுகாப்பவர்களாக, எத்திவைப்பவர்களாக இருக்கலாம் என்றார்கள்.

இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான முஹம்மத் இப்னு சீரீன்(ரஹ்) இதை அறிவிக்கும்போது, முஹம்மத்(ஸல்) அவர்கள் உண்மை கூறினார்கள் என்று கூறுவார்கள். பிறகு, நபி(ஸல்) அவர்கள், நான் உங்களிடம் (இறைச் செய்திகள் அனைத்தையும்) சேர்த்துவிட்டேனா? என்று இரண்டு முறை கேட்டார்கள். கூடியிருந்தோர் 'நிச்சயமாக நீங்கள் எடுத்துரைத்தீர்கள், நிறைவேற்றினீர்கள், நன்மையை நாடினீர்கள், என நாங்கள் சாட்சி கூறுவோம்' என்றார்கள்.

அப்போது நபியவர்கள் தங்களது ஆட்காட்டி விரலை வானை நோக்கி உயர்த்திய பின்பு மக்களை நோக்கித் திரும்பி 'அல்லாஹ் இதற்கு நீயே சாட்சி' என்று மூன்று முறை கூறினார்கள். (புகாரி: 67,1741,4406, 4409,3197,4662,5550,7447,1834,3189,4313, முஸ்லிம்: 3467,3468,2632, திர்மிதி, முஸ்னது அஹ் மத், தஃப்ஸீர் தபரீ, தஃப்ஸீர் இப்னு மர்த வைஹி, இப்னு ஜரீர், இப்னு ஹிஷாம், இப்னு கஸீர் 4:261-269.3:10,11, அர்ரஹீக் அல்மக்தூம் : பக். 558-564) அப்போதுதான்,

'இன்று உங்களது மார்க்கத்தை உங்களுக்காக நான் முழுமையாக்கிவிட்டேன் எனது அருட்கொடையையும உங்கள் மீது நான் நிறைவுசெய்துவிட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை உங்களது மார்க்கமாக ஏற்றுக் கொண்டுவிட்டேன்' அல்குர்ஆன்5:3 எனும் வசனம் அருளப்பெற்றது. அதாவது, ஹிஜ்ரி பத்தாம் ஆண்டு அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் மேற்கொண்ட விடைபெறும் ஹஜ்ஜின்போது 'அரஃபா தினம்' எனப்படும் துல்ஹஜ் ஒன்பதாம் நாள் (வெள்ளிக்கிழமை) 'அரஃபாப் பெருவெளியில் நபியவர்கள் தங்கியிருந்த வேளையில் தான் இத்திருவசனம்(5:3) அருளப்பெற்றது என்பதாகப் பலமான அறிவிப்புகள் பல வந்துள்ளன. (புகாரி: 4606ன் சிறு குறிப்பு: மூன்றாவது, ஃபத்ஹுல் பாரீ) மேலும்,

**யூதர்களும் அறிந்த பிரபல்யமான விஷயம் தான்:**

தாரிக் இப்னு யுஹாப்(ரஹ்) அவர்கள் அறிவித்ததாவது, யூதர்கள் உமர்(ரழி) அவர்களிடம், 'நீங்கள் ஓர் இறைவசனத்தை ஓதுகின்றீர்கள், அந்த வசனம் மட்டும் எங்களிடையே இறங்கியிருந்தால் அந்த நாளை நாங்கள் பண்டிகை நாளாக ஆக்கிக் கொண்டிருப்போம்' என்று கூறினர். அப்போது உமர்(ரழி) அவர்கள், 'அது எப்போது இறங்கியது? எங்கே இறங்கியது? அது இறங்கிய வேளையில் அரஃபா (துல்ஹஜ் 9ஆம்) நாளில் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் எங்கேயிருந்தார்கள் என்பதையெல்லாம் அறிவேன். அல்லாஹ்வின் மீதாணையாக! நாங்கள் அப்போது அரஃபாவில் இருந்தோம். (இதன் மூன்றாம்) அறிவிப்பாளர் சுஃப்யான் அஸ்ஸவ்ரீ(ரஹ்) கூறுகிறார்கள். 'இன்று உங்களின் மார்க்கத்தை உங்களுக்காக நான் முழுமையாக்கிவிட்டேன்' எனும் (திருக்குர்ஆன் 5:3வது) வசனம் அருளப்பட்ட நாள் (சிலரின் அறிவிப்பிலுள்ளது போல்) வெள்ளிக்கிழமையாக இருந்ததா? அல்லது (வெள்ளிக்கிழமையாக) இல்லையா? என்று நான் (தீர்மானிக்க முடியாமல்) சந்தேகப்படுகிறேன் என்றார்கள். (புகாரி: 4606,4607) அத்தியாயம்:65, திருக்குர்ஆன் விளக்கவுரை. மேலும் அது ஓர் வெள்ளிக்கிழமை தான் என மற்றுமோர் ஆதாரப்பூர்வமான புகாரியின் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:

யூதர்களில் ஒருவர் உமர்(ரழி) அவர்களிடம், அமீருல் மூஃமினீன் அவர்களே! நீங்கள் உங்கள் வேதத்தில் ஓதிக் கொண்டிருக்கும் ஒரு வசனம் யூதர்களாகிய எங்களின் மீது இறங்கியிருந்தால் அந்த நாளை நாங்கள் ஒரு பெருநாளாக ஆக்கிக் கொண்டிருப்போம்' என்றார். அதற்கு உமர்(ரழி) அவர்கள் 'அது எந்த வசனம்?' எனக் கேட்டார்கள். அதற்கவர் கூறினார். 'இன்றைய தினம் உங்களின் மார்க்கத்தை உங்களுக்கு நிறைவுபடுத்திவிட்டேன். உங்களின் மீது என்னுடைய அருள்கொடையை முழுமைப் படுத்தி விட்டேன். இஸ்லாத்தையே உங்களுக்கான மார்க்கமாகத் திருப்தி(யுடன் அங்கீகரித்துக்) கொண்டேன்' (எனும் திருக்குர்ஆனின் (5:3) இந்தத் திருவசனம்தான் அது என்றார்). அதற்கு உமர்(ரழி) அவர்கள் 'அவ்வசனம் எந்த நாளில் எந்த இடத்தில் வைத்து நபி(ஸல்) அவர்களின் மீது இறங்கியது என்பதை நாங்கள் அறிவோம். 'அரஃபா பெருவெளியில் ஒரு வெள்ளிக்கிழமை தினத்தில் நபி(ஸல்) அவர்கள் நின்று கொண்டிருக்கும்போதுதான் (அவ்வசனம் அருளப்பட்டது என்றார்கள்) என தாரிக் இப்னு ஷிஹாப்(ரழி) அறிவித்தார். புகாரி 45.

மற்றோர் அறிவிப்பில் வந்துள்ளதாவது: கஃஅப்(ரழி) அவர்கள், ஒருமுறை 'இந்த வசனம் மட்டும் வேறொரு சமுதாயத்தாருக்கு அருளப்பெற்றிருந்தால் எந்த

நாளில் அது அருளப்பெற்றதோ அதைக் கவனத்தில் கொண்டு அதைக் கூடி மகிழும் பண்டிகை நாளாக ஆக்கிக் கொண்டிருப் பார்கள்' என்று கூறினார்கள். அப்போது உமர்(ரழி) அவர்கள், 'கஃஅபே! அது எந்த வசனம்?' என்று கேட்டார்கள். உடனே அவர், 'இன்று உங்களது மார்க்கத்தை உங்க ளுக்காக நான் முழுமையாக்கி விட்டேன் எனது அருட்கொடையையும் உங்கள் மீது நான் நிறைவு செய்துவிட்டேன் இன்னும் உங்களுக்காக இஸ்லாத்தை உங்களது மார்க் கமாக ஏற்றுக் கொண்டுவிட்டேன்' எனும் வசனம் என்றார். அப்போது உமர்(ரழி) அவர்கள், 'அந்த வசனம் அருளப்பெற்ற நாளையும், அது அருளப்பெற்ற இடத்தை யும், நான் நிச்சயமாக அறிந்துள்ளேன். துல் ஹிஜ்ஜா ஒன்பதாவது, அரஃபாவுடைய நாள் வெள்ளிக்கிழமை அருளப்பெற்றது. அல்லாஹ் புகழுக்குரியவன், அரஃபாவு டைய நாளும் வெள்ளிக்கிழமை நாளும் ஆகிய அவ்விரு நாட்களுமே நமக்குப் பண் டிகை நாட்கள்தான்' என்றார்கள். (தஃப்சீர் தபரீ, தஃப்சீர் இப்னு கஸீர்: 3:19-47)

**நியாயமான காரணங்கள்:**

'உண்மையில் பல எதிர்ப்புகளுக்கு மத் தியில் தோன்றிய இஸ்லாம் எனும் இறை மார்க்கம் எல்லா எதிர்ப்புகளையும் சமா ளித்து முழுமை அடைந்துவிட்டதாக இறை வனே அறிவித்த நாள் ஒரு பெருநாளாகவே இருக்கும் என்பதை மறுப்பதற்கில்லை. தங் களுக்கும் இப்படியொரு வசனம் அருளப் பெற்றிருக்குமானால் அது அருளப்பெற்ற நாளை ஒரு பெருநாளாகக் கொண்டா டியிருப்போம் என யூதர்கள் தெரிவித்த போதுதான் இந்த வசனம் எந்த இடத்தில், எந்த நாளில், எந்தச் சூழ்நிலையில் அருளப் பெற்றது என்பது தமக்கு நன்றாகவே தெரி யும் என்று உமர்(ரழி)அவர்கள் பதிலளித் தார்கள். அதாவது இவ்வசனம் அருளப் பெற்ற அரஃபாவுடைய 'வெள்ளிக்கிழமை' நாளே பெருநாள்தான் என்பதையே இந்த பதில் மூலம் உமர்(ரழி) அவர்கள் யூதர்க ளுக்கு சுட்டிக்காட்டினார்கள் என்று கூறப் படுகிறது. ஏனெனில் ஹஜ் பயணிகளுக்கு துல்ஹஜ் மாதம் அரஃபாவுடைய ஒன்ப தாம் நாள்தான் பெருநாள் ஆகும். அன்று வெள்ளிக்கிழமையாகவும் இருந்தது என் பது புகாரி: 45ஆவது ஹதீதின் அறிவிப்பா கும். (புகாரி: 4606இன் சிறு குறிப்பு, மூன்றா வது ஃபத்ஹுல் பாரீ) மேலும் பார்க்க: புகாரி: 4606,4407,45,7268) ஆகவே! ஸஹீ ஹான அறிவிப்புகளான இவை தவிர அரஃ பாவுடைய நாள் தொடர்பாக வரும் மற்ற அனைத்து அறிவிப்புகளும், நேரடி ஆதார மற்றதாகவும், பலவீனமான, சந்தேகமான அறிவிப்புகளாகவுமே இருக்கின்றன. எனவே!

**சந்தேகமானவற்றை பின்பற்றக்கூடாது:**

சந்தேகம் என்பதற்குத் தூய இஸ்லாத் தில் துளிகூட இடமில்லை. (49:1) அது போன்ற சந்தேகங்களின் பிறப்பிடமாகக் கருதப்படும். அனுமானம், யூகம், தோராய மானது, குத்துமதிப்பு போன்றவற்றுக்கும் தூய இஸ்லாத்தில் துளிகூட இடமில்லை என்பதனை பரிசுத்த அல்குர்ஆன் இவ்வாறு பேசுகின்றது.

உமக்குத் திட்டவட்டமான அறிவு இல்லாத விஷயங்களை நீர் பின்பற்ற வேண்டாம். (17:36)

பாவி ஒருவன் உங்களிடம் ஒரு செய்தி யைக் கொண்டுவந்தால் அதைத் தீர்க்கமாக விசாரித்து அறிந்துகொள்ளுங்கள். (49:6)

இன்னும் அவர்கள் தங்களது இறைவ னுடைய (வேத) வசனங்களைக் கொண்டு நினைவூட்டப்பட்டால் செவிடர்களையும், குருடர்களையும் போல் அவற்றின் மீது (சென்று) விழமாட்டார்கள். (25:73)

(மனிதர்களில் சிலர்) இவர்களுடன் இல்லை, அவர்களுடனும் இல்லை, இரு பிரி வினர்களுக்கிடையே தத்தளித்துக் கொண் டிருக்கிறார்கள். (4:143)

அவர்களுடைய இருதயங்கள் சந்தே கத்திலேயே இருக்கின்றன. ஆகவே அவர் கள் தமது சந்தேகங்களினால் (இங்குமங்கு மாக) உழலுகின்றார்கள். (9:45)

**(தொடர்ச்சி 3ம் பக்கம் பார்க்கவும்)**

# சோதனைகளின்போது பொறுமை கொள்ள வேண்டும்

**அக்டோபர் மாத தொடர்ச்சி...**

அபூ அஸீம், இலங்கை

**...நீங்கள் தண்டிப்பதாக இருந்தால் எந்த அளவிற்கு நீங்கள் தண்டிக்கப்பட்டீர்களோ? அது போன்ற அளவுக்கே நீங்களும் தண்டியுங்கள். (ஆனாலும் பொறுத்துக் கொண்டால், நிச்சயமாக அதுவே பொறுமையாளருக்கு மிக்க மேன்மை யானதாகும்)**

ஃபிர்அவ்னின் மனைவி ஆஸியா பின்த் முஸாஹிம்(ரழி) அவர்களுடைய இரண்டு கைகளையும், கால்களையும் கயிற்றால் இறுகக் கட்டி அவனின் முன்னிலையிலேயே முளைகளில் பிணைக்கப்பட்டு வெயிலில் கிடத்தப்பட்டுக் கொடுமையான வேதனைக்கு உள்ளாக்கப்படுபவராக இருந்தார். அப்போதும் அவர் 'பொறுமையாகவே' இருந்தார். இவ்வாறாகக் கொடுமைப்படுத்தப்பட்ட நிலையிலேயே அவனது கண் முன்னாலேயே அவருடைய உயிர் கைப்பற்றப்பட்டு அவர் மரணத்தைத் தழுவினார். *(ஸல்மான் ஃபார்ஸி(ரழி), இப்னு ஜரீர் தபரீ(ரஹ்), தஃப்ஸீர் இப்னு கஸீர், பாகம் 9, பக்கம் 530-534)* அதனை நபி(ஸல்) அவர்களும் குறிப்பிட்டுப் போற்றியவர்களாக;

ஆண்களில் நிறையப் பேர் முழுமையடைந்திருக்கிறார்கள், பெண்களில் ஃபிர்அவ்னின் துணைவியார் ஆஸியாவையும், இம்ரானின் மகள் மர்யமையும் தவிர வேறெவரும் முழுமையடையவில்லை என்று அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அபூ மூஸா அஷ்அரி(ரழி) புகாரி 3411, 3433, 3769,3770,5418, 5419, முஸ்லிம்: 4816, திர்மிதி:1757)* ஆனாலும் மர்யம்(அலை) அவர்களும் வசைபாடுபவர்களால் கடுமையாகச் சோதிக்கப்பட்டார்கள்.

பின்னர் (மர்யமாகிய) அவர் தமது குழந்தையைச் சுமந்துகொண்டு தமது சமூகத்தாரிடம் வந்தார். (அப்போது) அவர்கள் மர்யமே "நீ வினோதமான காரியத்தைச் செய்துவிட்டாய்" என்று கூறினார்கள்.

ஹாரூனின் சகோதரியே! உனது தந்தை கெட்ட மனிதராக இருந்ததில்லை, உனது தாயும் நடத்தை கெட்டவராக இருக்கவில்லை என்றும் கூறினார்கள்.

*(அல்குர்ஆன் 19:27-28)*

அப்போது (மர்யமாகிய) அவர் தமது குழந்தையைச் சுட்டிக்காட்டினார். அதற்கு (மர்யம் தங்களை அலட்சியம் செய்கிறார் என்றும், கேலி செய்கிறார் என்றும் எண்ணி ஆத்திரமடைந்த) அவர்கள் (கோபம் கொண்டு) தொட்டில் குழந்தையாக உள்ளவரிடம் நாங்கள் எப்படிப் பேச முடியும்? (தொட்டில் குழந்தையிடம் பேசுமாறு தமக்கு உத்தரவிட்டதன் மூலம் மர்யம் நம்மைக் கேலி செய்துவிட்டார். இது அவர் செய்த மானக்கேடான செயலை விட மிகவும் கடுமையானது என்று கேட்டார்கள். *(19:29, சுத்தீ(ரஹ்), தஃப்ஸீர் இப்னு கஸீர், பாகம் 5, பக்கம் 581-587)* மேலும், நீ ஒரு தூய்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர். அக்குடும்பம் இறை வழிபாடுகளில் முதன்மையாகவும், சீர்மை, உலகப் பற்றின்மை ஆகிய நற்குணங்களுக்குப் பெயர் போனதாகவும் இருக்கும் நிலையில் இக்குடும்பத்தில் பிறந்த உன்னிடமிருந்து இத்தகைய ஒரு இழி செயல் எப்படித் தோன்றியது? என்றார்கள். *(இப்னு ஜரீர்(ரஹ்), தஃப்ஸீர் இப்னுகஸீர் பாகம் 5, பக்கம் 581-587)*

மர்யமின் மீது கற்பொழுக்கமில்லாதவர் என அவர்கள் குற்றம் சாட்டினார்கள் என்பதாக இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களும், மர்யம்(அலை) அவர்களைக் கற்பொழுக்கமில்லாதவர் என்றும், தவறான உறவின் மூலமே அவர் ஈஸாவைப் பெற்றெடுத்தார் என்றும், மர்யம்(அலை) அவர்கள் மீதும், அவருடைய மைந்தர் ஈஸா(அலை) அவர்கள் மீதும் பெரும் குற்றங்களைச் சுமத்தினார்கள், அவமானப்படுத்தினார்கள். சுத்தீ(ரஹ்) அவர்களும், அவர்களில் சிலர் அப்போது மர்யமுக்கு மாதவிடாய் ஏற்பட்டிருந்தது என்றும் கூடுதலாகக் கூறினார்கள் என்பதாக இப்னு கஸீர்(ரஹ்) அவர்களும் விளக்கம் கூறியுள்ளார்கள். *(தஃப்ஸீர் இப்னு கஸீர் பாகம் 2, பக்கம்: 787-819)*

விதையின்றி எங்கேனும் விருட்சம் முளைக்குமா? வித்தின்றி பயிர்தான் முளைக்குமா? தந்தையின்றிக் குழந்தை பிறக்குமா? என்றெல்லாம் கேட்டார்கள்.

பிறக்கப்போகும் குழந்தையால் தமக்குச் சோதனை ஏற்படும் என்பதையும் இக் குழந்தை விஷயத்தில் தமது நிலையை மக்கள் உரிய முறையில் அணுகப் போவதுமில்லை, தாம் கூறும் விஷயங்களை அவர்கள் நம்பப்போவதுமில்லை, இனி அவர்களின் எண்ணத்தில் தவறான நடத்தையுள்ள பெண்ணாகிவிடுவேன் என்பதை இஸ்ரவேலர்கள் மத்தியில் ஆச்சாரமும், இறை வழிபாடுகளில் ஆர்வமும் உள்ள பெண் என்று பெயர் எடுத்த மர்யம்(அலை) தெளிவாகப் புரிந்துகொண்டார்கள். ஆனாலும் வேறு வழியில்லை 'உண்ணா நோன்பிருந்து' அழகிய 'பொறுமையை' மேற்கொண்டார்கள். (தஃப்ஸீர் இப்னு கஸீர் பாகம்5, பக்கம் 571-577) இவ்வாறெல்லாம் மர்யமின் மீது மிகப் பெரும் அவதூறைச் சுமத்தியதாலும் அவர்களை நாம் சபித்தோம். (4:156)

ஹிஜ்ரி ஒன்பதில் நடைபெற்ற தபூக் போரின் போது கஅப் பின் மாலிக்(ரழி) அவர்கள் ஆரம்ப அணியில் சேர்த்து கொள்ளாமல் வேகமாகச் செல்லும் குதிரையில் ஏறிச் சென்று இணைந்து கொள்ளலாம் என்றெண்ணி இன்று நாளை என்றிருக்கையில் யுத்தம் முடிவுற்று படையினரும் மதீனாவுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள், இந்நிலையில், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களின் முன்னால் சென்று, சலாம் சொன்னபோது கோபத்திலிருப்பவர் எவ்வாறு ஏளனமாகப் புன்னகைப்பாரோ அதுபோலவே அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களும் புன்னகைத்தார்கள். என் முன்னே இருக்க வேண்டாம் எழுந்து செல்வீராக, உமது விஷயத்தில் அல்லாஹ்வே தீர்ப்பளிப்பான் என்றார்கள். முஸ்லிம்கள் யாரும் முராரா பின் ரபீஉ அல் அம்ர்(ரழி) ஹிலால் பின் உமைய்யா (ரழி) கஅப் பின் மாலிக்(ரழி) ஆகிய மூவரிடம் மட்டும் பேசக்கூடாது என்று தடை விதித்தார்கள்.

எனவே அந்த மூவரிடமும் எந்த முஸ்லிமும் பேசுவதில்லை முகம் வெறுத்தவர்களாக அவர்கள் விஷயத்தில் முற்றிலுமாக மாறித் தூரமானார்கள். இந்த உலகமே அவர்களுக்கு அன்னியமாக மாறிவிட்டது. இந்நிலையில் ஐம்பது நாட்கள் கழிந்தன.

யாருமே சலாம் சொல்வதில்லை. இவர்கள் சலாம் சொன்னால் கூட நபியவர்களோ, மற்றவர்களோ பதில் சலாம் சொல்வதில்லை, வெறுப்புடன் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்கள். இதனிடையே கஸ்ஸான் நாட்டின் இறை நிராகரிப்பாளரான அரசனிடமிருந்து தம்முடன் வந்து சேரும்படி அழைப்புக் கடிதம் வந்தது.

நாற்பது நாட்கள் கழிந்தபோது அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்களிடமிருந்து வந்த ஒரு தூதர் மனைவியை விட்டும் விலகிவிட வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார்.

இதுவோ ஒட்டுமொத்த சமூகப் புறக்கணிப்பு செய்யப்பட்டதொரு கொடிய நிலையாகும். பூமி விசாலமானதாக இருந்த போதிலும் அவர்களைப் பொறுத்தவரை அது மிகவும் சுருங்கிவிட்டது. அவர்களது உள்ளங்களும் சோதனைகளால் சுருங்கி விட்டது அல்லாஹ்வை விட்டும் தப்பிக்க அவனிடமே தவிர வேறு போக்கிடம் இல்லை எனும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள், பொறுமையை மேற்கொண்டார்கள், சரியாக ஐம்பது நாட்கள் கழித்து, ஏழு வானங்களையும் தாண்டி நற்செய்தி வந்தது. சுருக்கம் முழு விபரமறிய பாருங்கள். (9:118, 119, புகாரி பாகம் 6, பக்கம் 598, பாடம, 53, பக்கம் 740, சிறு குறிப்பு: 88,27 & 4418,4673-4678,2265, 2973,2947, 2948, 3951, 3889, 3556, 2757, 6255, 6690, 7225)

**இஸ்லாத்தை ஏற்றதற்காக மாறு கை, மாறு கால் வாங்கியபோதும் பொறுத்துக் கொண்ட சூனியக்காரர்கள்:**

மூஸா தமது கைத்தடியைக் கீழே எறிந்தார். உடனே அது (பெரும் பாம்பாக மாறி) அவர்களுடைய பொய்(ப் பாம்பு)களை (யெல்லாம்) விழுங்கிவிட்டது. (இதைப் பார்த்தவுடன் உண்மையை அறிந்த) சூனியக்காரர்கள் ஸஜ்தாவில் விழுந்தனர். அகிலங்களெல்லாவற்றின் இறைவன் மீது நாங்கள் இறை நம்பிக்கை கொண்டோம். 'அவனே மூஸாவுக்கும், ஹாரூனுக்கும்

இறைவனாவான்' என்றும் கூறினார்கள். அதற்கு ஃபிர்அவ்ன் (அவர்களை நோக்கி) உங்களுக்கு நான் அனுமதி கொடுப்பதற்கு முன்னரே நீங்கள் அவர்மேல் இறை நம்பிக்கை கொண்டுவிட்டீர்களா? நிச்சயமாக இது ஒரு சூழ்ச்சியாகும் இவர்தான் உங்களுக்குச் சூனியத்தைக் கற்றுக் கொடுத்த குருவானவராகும். இந்நகரவாசிகளை அதிலிருந்து வெளியேற்றுவதற்காக மூஸாவுடன் சேர்ந்து நீங்கள் செய்த சூழ்ச்சியேயாகும். இதன் விளைவை நீங்கள் அதிவிரைவில் அறிந்து கொள்வீர்கள். நிச்சயமாக நான் உங்கள் கைகளையும், கால்களையும் மாறு கை, மாறு கால் வாங்கி உங்கள் யாவரையும் சிலுவையில் அறைந்து (கொன்று) விடுவேன் என்று கூறினான்.

அதற்கு அவர்கள் (அவ்வாறாயின் அதனால் எங்களுக்கு) எந்தக் கெடுதியும் இல்லை. நிச்சயமாக நாங்கள் எங்கள் இறைவனிடம் தான் திரும்பிச் செல்வோம். (எனவே இதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை) எங்கள் இறைவன் எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னித்து விடுவான் என்று நாங்கள் ஆதரவு வைக்கின்றோம் என்றும் கூறினார்கள்.

மேலும், எங்களுக்கு எங்கள் இறைவனிடமிருந்து வந்துள்ள அத்தாட்சிகளை நாங்கள் நம்பினோம் என்பதற்காகவே நீ எங்களைப் பழி வாங்குகிறாய்! என்று கூறி 'எங்கள் இறைவனே! எங்கள் மீது 'பொறுமையையும்' மன உறுதியையும் பொழிவாயாக! முஸ்லிம்களாக (உனக்கு முற்றிலும் வழிப்பட்டவர்களாக எங்களை ஆக்கி) எங்க(ள் ஆத்மாக்க)ளைக் கைப்பற்றிக் கொள்வாயாக!' (எனப் பிரார்த்தித்தனர்). அல்குர்ஆன் 7:120-126, 20:70-73, 26:46-51 என்பதாக சோதனைகளின்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணமாக அவர்களைக் குறித்து அல்லாஹ் அதிசயித்துக் கூறுகின்றான். மேலும்,

**நிராகரிப்பவர்களாகிய அவர்களது பலவிதமான பேச்சின்போதும் பொறுமை வேண்டும்:**

ஆகவே (நபியே!) அவர்கள் (பலவிதமாகச்) சொல்வதை(யெல்லாம்) நீர் பொறுத்துக் கொள்வீராக. இன்னும் சூரியன் உதிப்பதற்கு முன்னும், அது அடைவதற்கு முன்னும், இரவின் நேரங்களிலும் உம்முடைய இறைவனின் புகழைத் துதித்துத் தொழுவீராக! மேலும், இன்னும் பகலின் (இரு) முனைகளிலும் இவ்வாறே துதி செய்து தொழுவீராக! இதனால் (நன்மைகளடைந்து) நீர் திருப்தி பெறலாம்.

(அல்குர்ஆன் 20:130)

இவர்கள் (பலவிதமாகவும்) கூறுவதைப் பற்றிப் பொறுமையுடன் இருப்பீராக! இன்னும், வல்லமையுள்ள நமது அடியார் தாவூதையும் நினைவு கொள்வீராக! நிச்சயமாக அவர் (எந்நிலையிலும் நம்மையே பொறுமையுடன்) நோக்குபவராக இருந்தார். (38:17)

**தண்டிப்பதை விடப் பொறுத்துக் கொள்வதே மேலானது:**

(முஃமின்களே!) நீங்கள் தண்டிப்பதாக இருந்தால் எந்த அளவிற்கு நீங்கள் தண்டிக்கப்பட்டீர்களோ? அதுபோன்ற அளவுக்கே நீங்களும் தண்டியுங்கள்.

(ஆனாலும் பொறுத்துக் கொண்டால், நிச்சயமாக அதுவே பொறுமையாளருக்கு மிக்க மேன்மையானதாகும்) (16:126)

அதுவும், 'ஏக இறைவனுக்காகவே பொறுமை வேண்டும்' இன்னும், உமது இறைவனுக்காகப் பொறுமையுடன் இருப்பீராக. (அல்குர்ஆன் 74:7)

இன்னும் அவர்கள் எத்தகையோரென்றால் தங்கள் இறைவனின் பொருத்தத்தைத் தேடி, 'பொறுமையைக்' கடைப்பிடிப்பார்கள். தொழுகையையும் நிலைநிறுத்துவார்கள். நாம் அவர்களுக்கு அளித்ததிலிருந்து இரகசியமாகவும், பகிரங்கமாகவும் (நன்முறையில்) செலவு செய்வார்கள். நன்மையைக் கொண்டே தீமையைத் தடுத்துக் கொள்வார்கள். இத்தகையோருக்கே மறுமையில் (சுவனபதி என்னும்) நல்ல வீடு இருக்கின்றது. (அல்குர்ஆன் 13:22)

இவர்கள் தமது (சோதனைகளின் போது ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன்) சகித்துக் கொண்டு தமது இறைவன் மீது முற்றிலும் சார்ந்து (அவன் மீதே) முழு நம்பிக்கை வைப்பவர்கள் ஆவர். (16:42)

**இன்ஷா அல்லாஹ் தொடரும்...**

# புகை பிடிப்பதை இஸ்லாம் தடை செய்கிறதா?

ஜி.ஜலாலுதீன்

**புகை பிடிப்பதை இஸ்லாம் தடை செய்கிறதா?**

புகை பிடிப்பது வெறுப்பிற்கு உரியது என்று ஒப்புக்கொண்டாலும், அதை இஸ்லாம் தடை செய்யவில்லை என்று முஸ்லிம்கள் பலர் கருதுகின்றனர். ஆனால், எல்லாவற்றுக்கும் இறைவனாகிய அல்லாஹ், மனிதனுக்கு அளித்த இறுதி வழிகாட்டுதலாகிய குர்ஆன் கூறும் கட்டளைகளின் அடிப்படையில் பார்க்கும்போது புகை பிடிப்பது ஹராம் (தடை செய்யப்பட்டது) என்று இஸ்லாம் கட்டளையிடுவது தெளிவாக விளங்கும்.

**புகையிலை எனும் விஷம்:**

புகையிலையில் 4000 இரசாயன பொருள்கள் இருக்கின்றன. அவற்றில் 200 இரசாயனங்கள் மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை. இதில் 30 இரசாயனங்கள் புற்று நோய் (கேன்சர்) விளைவிக்கக் கூடியவை. இவ்வளவு நச்சுத்தன்மை வாய்ந்த புகையிலையைக் கொண்டு தயாராகும் சிகரெட், பீடி, சுருட்டு போன்றவற்றில் இருந்து வெளியாகும் புகையும், புகையிலை, குட்கா (பான் பராக்) போன்றவற்றை மெல்லுவதால் வரும் புகையிலைச் சாறும் மனித உடலைப் பாதிக்கிறது.

**புகையிலையால் வரும் நோய்கள்:**

1. ஆண்மை இழப்பு
2. இதய நோய்
3. புற்று நோய்-மூக்கு, வாய், தொண்டை, உணவுக்குழாய், நுரையீரல், சிறுநீரகம், சிறுநீர்ப்பை.

**புகை பிறருக்கும் பகை!**

தங்களுடைய சிகரெட் (பீடி, சுருட்டு) வெளிப்படுத்தும் புகையில் வெறும் 15 சதவிகிதம் மட்டுமே புகை பிடிப்பவர்கள் உள்ளிழுக்கின்றனர். மீதம் 85 சதவிகிதம் புகை காற்றில் கலந்து விடுகிறது. இதனால் புகை

> **...“விசுவாசிகளே! உங்களை நீங்களே கொலை செய்து கொள்ளாதீர்கள்” “உங்கள் கைகளாலேயே உங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்’.**

பிடிப்பவருக்கு அருகில் இருப்பவர்கள் அவரை விட அதிகமாக பாதிக்கப்படுகின்றனர். குறிப்பாக, புகை பிடிக்கும் ஒரு குடும்பத் தலைவர் தன்னுடைய மனைவி, பிள்ளைகள் ஆகியோரின் உடல் நலக்கேடிற்கும், சில நேரங்களில் அவர்களுடைய மரணத்திற்கும் கூட காரணம் ஆகிறார். ஒரு பெண் தன்னுடைய கர்ப்பகாலத்தில் புகையிலை உபயோகப்படுத்தினால், அவளுக்கு ஊனத்துடன் குழந்தை பிறக்கும் வாய்ப்பு உள்ளது.

**புகையிலை எனும் கொலையாளி!**

உலகில் ஒவ்வொரு எட்டு வினாடிக்கு ஒரு மனிதர் புகையிலையினால் வந்த நோயின் காரணமாக உயிர் இழக்கிறார்.

புகையிலை காரணமாக உலகில் ஒவ்வொரு வருடமும் நாற்பது இலட்சம் மனிதர்கள் மரணம் அடைகிறார்கள். இதில் இந்தியாவில் மட்டும் வருடத்திற்கு எட்டு இலட்சம் மனிதர்கள் மரணம் அடைகிறார்கள் என்பது கவனத்திற்கு உரியது.

**இஸ்லாத்தின் பார்வையில் புகையிலை பழக்கம்!**

அனைத்திற்கும் அதிபதியாகிய அல்லாஹ் கூறுகிறான்:

‘அவர் (தூதர் முஹம்மத்) நன்மையான காரியங்களைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களில் இருந்து விலக்குவார். நல்லவற்றையே அவர்களுக்கு ஆகுமாக்கி வைப்பார், கெட்டவற்றை அவர்களுக்குத்

தடுத்து விடுவார். *அல்குர்ஆன் 7:157*

மேற்கண்ட திருமறை வசனம் மூலம் நன்மை தரக்கூடியவையே மனிதர்களுக்கு அனுமதிக்கப்பட்டது(ஹலால்) தீமை தரக் கூடியவையே மனிதர்களுக்கு தடுக்கப்பட் டது (ஹராம்) என்பது நன்கு விளங்குகிறது.

கெடுதி விளைவிக்கக் கூடியவை ஹராம் என்பதால், தனக்கும் பிறருக்கும் கேடு விளைவிக்கக் கூடிய புகையிலையும் ஹராம். எனவே புகையிலை இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டது என்பது நன்கு விளங்கு கிறது.

மேலும், ஆதாரங்கள்,

**புகையிலை = தற்கொலை = ஹராம்**

புகை பிடிப்பதாலும், புகையிலை மெல் லுவதாகும் ஒரு மனிதர் தன்னுடைய உயி ரைப் போக்கக் கூடிய நோய்களை இதய நோய், புற்றுநோய் ஆகியவற்றை தானே வரவழைத்துக் கொள்கிறார். தன்னுடைய உயிருக்கு ஆபத்து என்று நன்கறிந்தும் அவர் தொடர்ந்து இந்த பழக்கத்தில் ஈடுபடுவது தற்கொலை முயற்சியே ஆகும். ஆனால்,

“விசுவாசிகளே!... உங்களை நீங்களே கொலை செய்து கொள்ளாதீர்கள்”

*அல்குர்ஆன் 4:29*

“உங்கள் கைகளாலேயே உங்களை அழி வின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள்’.

*அல்குர்ஆன் 2:195*

என்று அல்லாஹ் கட்டளை இடுகிறான். இதன் மூலம் தன்னுடைய உடலிற்கும் உயி ருக்கும் ஆபத்து விளைவிக்கக்கூடிய புகை யிலை ஹராம் என்பது தெளிவாகிறது.

**புகையிலை = கொலை = ஹராம்**

புகை பிடிப்பதால் எவ்வாறு நம்மைச் சுற்றி இருப்பவர்கள், நமது நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோர் உயிரைக் கொல் லும் நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நாம் படித்தோம் இதைப் பற்றி இஸ்லாம் கூறுவது என்ன?

‘எவனொருவன் மற்றொரு ஆத்மாவை கொலைக்குப் பிரதியாகவோ, அல்லது பூமி யில் குழப்பத்தைத் தடை செய்வதற்கா கவோ அன்றி (அநியாயமாக) கொலை செய் கிறானோ, அவன் மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவன் போலாவான்’.

*அல்குர்ஆன் 5:32*

‘தவறாக அன்றி, யாதொரு விசுவாசி யைக் கொலை செய்வது, எந்த விசுவாசிக் கும் ஆகுமானதல்ல...’ *அல்குர்ஆன் 4:92*

‘எவரேனும் யாதொரு முஸ்லிமை (நன் கறிந்து) வேண்டுமென்றே கொலைச் செய் தால், அவனுக்குரிய தண்டனை நரகம்தான்’

*அல்குர்ஆன் 4:93*

மேற்கண்ட இறை சட்டங்கள் மூலம் கொலை செய்வது ஹராம்; அதற்குத் தண் டனை நரகம்தான் என்பது தெளிவாக விளங்குகிறது. இதன்மூலம், பிறருடைய உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் புகை பிடிக் கும் பழக்கம் ஹராம் என்பது தெளிவாகிறது.

**புகை = வீண் விரயம் = ஹராம்**

அல்லாஹ் கூறுகிறான்: ‘மிதமிஞ்சி செலவு செய்வோர் ஷைத்தானுடைய சகோ தரர்களாக இருக்கின்றனர். ஷைத்தானோ, தன் இறைவனுக்கு நன்றி செலுத்தாதவன்’

*அல்குர்ஆன் 17:26,27*

பணத்தை பலனற்ற வீண் செலவு செய் யும் முஸ்லிம்கள் இந்த வசனத்தை சிந்தித் துப் பார்க்கவேண்டும். இனியும் நீங்கள் ஷைத்தானின் சகோதரர்களாகவே தொடர விரும்புகிறீர்களா?

**புகை நாற்றம் = தொழுகையில் தடங்கல்**

புகை பிடிப்பவருடைய உடல், உடை, வீடு ஆகிய அனைத்திலும், புகை நாற்றம் படர்ந்து கிடக்கிறது. புகை பிடிக்கும் ஒருவர் பள்ளிவாசலில் பலரோடு சேர்ந்து தொழும்போது, அவரிடம் இருந்து எழும் துர்நாற்றம் உடன் தொழுவோரின் கவனத் தைச் சிதற வைக்கிறது. இதனால் புகை பிடிப்போர் தொழுகையாளிகளுடைய தொழுகையைக் கெடுத்த பாவத்திற்கு ஆளாகிறார்.

மேற்கன்ட ஆதாரங்களின் மூலம் புகை பிடிப்பதும், புகையிலை மெல்லுவதும் தீங்கு விளைவிக்கக் கூடியவைதான் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. இதன்மூலம் அவை ஹராம் (தடுக்கப்பட்டவை, விலக் கப்பட்டவை) என்பதும் நிரூபிக்கப்பட்டு விட்டது.

**புகை பிடிப்பது மனதை அமைதிப்படுத்துகிறது?**

புகை பிடிப்பதால் மன அழுத்தம் (டென்ஷன்) குறைகிறது. மனம் அமைதி அடைகிறது என்ற கூற்றை மருத்துவ இயல் வல்லுநர்கள் ஒட்டுமொத்தமாக நிராகரிக் கின்றனர்.

ஆனால், 'மெய்யாகவே அல்லாஹ்வை நினைவுகூர்வதன் மூலமாக இதயங்கள் அமைதி பெறுகின்றன' அல்குர்ஆன் 13:28

உண்மையான மன அமைதியை நாடு பவர்கள் அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறக்கூடிய செயல்களான குர்ஆன் ஓதுதல், குர்ஆனை விளங்குதல், அல்லாஹ் குர் ஆனில் கூறும் கட்டளைகளைச் செயல் படுத்துதல் ஆகிய செயல்கள் மூலமாக மன அமைதியைப் பெற்றுக் கொள்வார்கள்.

**புகை பிடிக்கும் எண்ணம் எழும்போது:**

இனி புகைபிடிக்கவேண்டும் என்ற தீய எண்ணம் எழும்போது, இறைவன் கூறிய இந்த வசனத்தை நினைவு கூறுங்கள்.

'எவர்கள் நம்முடைய வழியில் (செல்ல) முயற்சிக்கின்றார்களோ அவர்களை நிச்சய மாக நாம் நம்முடைய (நேரான) வழியில் செலுத்துகிறோம்'. (அல்குர்ஆன் 29:59)

'விசுவாசிகளே! (நீங்கள் உங்கள் முயற்சி களில் வெற்றியடையும் பொருட்டு) பொறு மையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையோர்களுடன் இருக்கின்றான்'. அல்குர்ஆன் 2:153

ஆதலால், தொழுகையைக் கடை பிடித்து, மனோ இச்சையை எதிர்த்து விடா முயற்சியுடன்,

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

1. எஞ்சியுள்ள சிகரெட்டுகள் (பீடி, சுருட்டு) அனைத்தையும் உடனே தூக்கி எறியுங்கள்.
2. புகை பிடிக்கும் பழக்கம் உள்ளவர்க ளோடு தொடர்புகளை, சந்திப்புகளைக் குறையுங்கள், யார் உங்களுக்கு சிக ரெட்டு(பீடி, சுருட்டு) வழங்கினாலும் வாங்காதீர்கள்.
3. டீ, காபி போன்ற நரம்புகளை உற்சாக மூட்டக்கூடிய பானங்களைக் குடிப்ப தைத் தவிருங்கள்.
4. புகை பிடிப்பதை நிறுத்தும்போது அதிக மாக நீர் அருந்துங்கள், நாவறட்சி புகை பிடிப்பதை நிறுத்தும்போது ஏற்படும் அறிகுறிகளில் ஒன்றாகும்.
5. புகை பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் போது நீங்கள் உங்கள் கைகளால் செய்யக்கூடிய வேளைகலில் ஈடுபடுங்கள். சிகரெட்டைப் பிடிக்கும் கரங்களை வேறு வேலைகளில் ஈடுபடுத் துங்கள்.

நமக்கும் பிறருக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய, இறைவனின் சட்டங்களால் தடை செய்யப்பட்ட புகை பிடிக்கும் பழக்கத்தை முஸ்லிம்களும், பிற மக்கள் அனைவரும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

அல்லாஹ் குர்ஆனில் கூறியுள்ள கொள் கைகளையும் சட்டங்களையும் அவனு டைய இறுதித் தூதர் முஹம்மது (அவர்கள் மீது அல்லாஹ்வின் அருளும் அமைதியும் உண்டாகட்டும்) அவர்கள் காட்டிய வழி யில் பின்பற்றி நிரந்தர வெற்றியும் நிலை யான அமைதியும் பெற உலகமக்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அனைவரும் நன்மை பெற அல்லாஹ் விடம் (மட்டுமே) இறைஞ்சுகிறோம். எல்லாரையும் இரட்சிக்கும் அல்லாஹ் வுக்கே புகழ் அனைத்தும்.

# இணைய வழி இல்லம் நுழையும் குழப்பவாதிகள்

அபூ ஹனிபா, புளியங்குடி

**...முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பார்கள். அதுபோல இந்த ஹதீதுக்கு அவர்கள் கொடுத்த தவறான விளக்கத் தின்மூ லம்அ வர்கள்கொ டுத்தப ல விளக்கங்கள் தவறாகவே அமைந்திருக் கிறது.**

**யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் 1000 பேரில் 1000 பேர் நரகவாதியா?**

**சமூக வளைதளங்களில் ஃபஸாது:**

கடந்த சில ஆண்டுகளாக யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார்கள் பற்றி பலரும் பல விதமான கருத்துக்களை விளக்கம் என்ற பெயரில் சமூக வலைதளங்களில் வீடியோ வாக பதிவிட்டு வருகிறார்கள்.

தனது முடிவை நோக்கி உலகம் பயணித்துக் கொண்டிருப்பதையும், அதன் நெருக்கத்தில் நாம் இப்போது இருப்பதை யும் நம்மில் பெரும்பாலானோர் அறிந்த வையே. அதன் ஓர் அடையாளமாக அறி வீனர்களை மக்கள் தம் தலைவர்களாக்கிக் கொள்வார்கள். அவர்களது தீர்ப்பு மூலம் தாமும் வழிதவறி, பிறரையும் வழிதவறச் செய்வார்கள் என்ற நபிமொழி(புகாரி:100) அடிப்படையில் மேடைகளிலும், இணை யத்திலும், மார்க்கம் என்ற பெயரில் தனது கற்பனைக் குதிரைகளின் கால்தடங்களை கேட்போர் நெஞ்சில் பதித்துச் செல்கின்றார் கள். இன்றைய நவீன கால மார்க்க அறிஞர் கள் அவர்களின் பேச்சுகளில் சமீபகாலமாக இணையத்தில் பரவிவரும் தலைப்புகளில் ஒன்றுதான் இறுதிநாளின் அடையாளமான யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார்.

குறிப்பாக யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத் தார் அடைத்து வைக்கப்படவில்லை, அவர்கள் வெளியே தான் இருக்கிறார்கள். அவர்கள் வெள்ளை நிறத்தை உடைய பிரிட்டீஸ்காரர்களும், மஞ்சள் நிறத்தை உடைய மங்கோலியர்களும்தான். மேலும் மறுமைநாள் அடையாளங்கள் சம்பந்தமாக வரக்கூடிய ஹதீத்களுக்கு அறிவியல் வளர்ச் சிக்கு ஏற்ப சிந்தித்து விளங்கிக் கொள்ள வேண்டும். முற்கால அறிஞர்களின் விளக் கத்தை அப்படியே கண்மூடி பின்பற்றக் கூடாது. இன்றைக்கு இருக்கக்கூடிய பெரும் பான்மை மக்கள் சுயமாக சிந்திப்பதில்லை. முற்கால அறிஞர்களை அப்படியே தக்லீது செய்து வருகிறார்கள் என்று கூறி வரு கிறார்கள்.

முதலில் யஃஜூஜ் மஃஜூஜ் சம்பந்த மாக வரக்கூடிய புகாரி : 3348வது ஹதீதுக்கு உண்மையான விளக்கம் என்ன? நவீன கால அறிஞர்களின் விளக்கம் என்ன என்பதை பார்ப்போம்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் (மறுமை நாளில்) ஆதம் (அலை) அவர்களை நோக்கி, ‘ஆதமே!’ என் பான். அதற்கு அவர்கள், ‘இதோ! வந்துவிட் டேன். கட்டளையிடு! காத்திருக்கிறேன். நலம் அனைத்தும் உன் கரங்களில் தான்’ என்று கூறுவார்கள். அப்போது அல்லாஹ், ‘நீங்கள் நரகத்திற்குச் செல்ல இருப்பவர் களை தனியாகப் பிரித்திடுங்கள் என்று கூறுவான்.

ஆதம்(அலை) அவர்கள், ‘எத்தனை நரகவாசிகளை?’ என்று கேட்பார்கள். அதற்கு அவன், ‘ஒவ்வோர் ஆயிரம் பேரிலி ருந்தும் தொள்ளாயிரத்துத் தொண்ணூற் றொன்பது பேரை என்று பதிலளிப்பான். இப்படி அவன் கூறும் வேளையில் சிறுவன் கூட நரைத்து விடுவான். கர்ப்பமுற்ற பெண் ஒவ்வொருத்தியும் கர்ப்பத்தைப் பிரசவித்து விடுவாள். மக்களை போதையுற்றவர்களாக நீங்கள் காண்பீர்கள். ஆனால், அவர்கள் போதையுற்றிருக்க மாட்டார்கள். ஆனால், அல்லாஹ்வின் வேதனை கடுமையான தாகும். (இவ்வாறு நபி(ஸல்) அவர்கள் கூறியதும்)

உடனே மக்கள், ‘இறைத்தூதர் அவர் களே! நரகத்திலிருந்து அந்த ஒரு நபர் எங்க ளில் யார்?’ என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள், ‘நற்செய்தி பெற்று மகிழுங்கள்!

உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரில் ஓராயிரம் பேர் இருப்பார்கள். பிறகு, என் உயிரைத் தன் கையில் வைத்திருப்பவன் மீது சத்தியமாக! நீங்கள் சொர்க்கவாசிகளில் கால் பங்கினராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்று கூறினார்கள். உடனே, நாங்கள் 'அல்லாஹு அக்பர் என்று கூறினோம். உடனே அவர்கள், 'சொர்க்கவாசிகளில் நீங்கள் மூன்றில் ஒரு பங்கினராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்' என்று கூறினார்கள். நாங்கள் 'அல்லாஹு அக்பர்' என்று கூறினோம். அவர்கள், 'சொர்க்கவாசிகளில் பாதித் தொகையினராக நீங்கள் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்' என்று கூறினார்கள். நாங்கள் 'அல்லாஹ் அக்பர்' என்று கூறினோம். அப்போது அவர்கள், 'நீங்கள் (மஹ்ஷர் மைதானத்தில் கூடியிருக்கும்) மக்களில் வெண்ணிறக் காளையின் மேனியில் உள்ள கருப்பு முடியைப் போன்றே இருப்பீர்கள். அல்லது கருநிறக் காளையின் மேனியில் உள்ள வெள்ளை முடியைப் போன்றே இருப்பீர்கள். (மொத்த மக்களில் குறைந்த எண்ணிக்கையில் இருப்பீர்கள்) என்று கூறினார்கள் என அபூ ஸயீத் அல் குத்ரீ(ரழி) அறிவித்தார். புகாரி:3348

**'நவீன' விளக்கம் :**

இந்த ஹதீதுக்கு விளக்கம் சொல்கிறேன் என்ற பெயரில் நவீன மார்க்கப் பிரசங்கி ஒருவர் பல கேள்விகளை முன் வைத்திருக்கிறார். உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார்கள் 1000 பேர் இருப்பார்கள் என்று சொன்னால்? இன்றைக்கு உலகத்தில் 700 கோடி பேர் இருக்கிறார்கள்? அப்படி என்றால் இந்த பூமியில் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார். 7 இலட்சம் கோடி பேர் இருக்கிறார்களா? அப்படி இருந்தால் அவர்கள் எங்கே இருக்கிறார்கள். நம்மை விட அதிகமாக இருக்கும் அவர்களை எப்படி அடைத்து வைக்க முடியும்? அதனால் அவர்கள் அடைத்து வைக்கப் படவில்லை. அவர்கள் வெளியில் தான் இருக்கிறார்கள். நம்மோடு கலந்து இருக்கிறார்கள் என்று சொல்கிறார்.

மேலும் இரண்டு மலைகளுக்கு இடையே தடுப்புச்சுவர் கட்டி தான் துல்கர்னைன் மன்னர் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரை தடுத்து வைத்தார்கள். மேலே மூடி போட்டு அடைத்து வைக்கவில்லை. இப்போதும் அடைத்து வைக்கப்பட்டு இருந்தார்கள் என்று சொன்னால் சுவருக்கு அந்த புறம் இருப்பவர்களை நம்மால் பார்க்க முடியுமா? முடியாதா? இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் இவ்வளவு பெரிய கூட்டம் அடைத்து வைக்கப்பட்டு இருந்தால் சேட்டிலைட் கொண்டு அவர்களை கண்டுபிடித்து விட முடியுமா? முடியாதா? என்று கேட்கிறார்.

அதுபோல சொர்க்கவாசிகளில் நீங்கள் நான்கில் ஒரு பங்கினராக, மூன்றில் ஒரு பங்கினராக, பாதி பங்கினராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்று அல்லாஹ் வின் தூதர்(ஸல்) அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால் நான்கில் ஒரு பகுதி முஸ்லிம்கள் என்றால் மற்ற பங்கினர் யார்? நரகவாசிகள் சொர்க்கத்திற்கு வரமுடியாது. அப்படி என்றால் மற்ற பங்கினர் யார்? அவர்கள் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினராகத்தான் இருக்க முடியும் என்று சொல்கிறார். இப்படி பல கேள்விகள் கேட்டு அதற்கு தகுந்தாற்போல் சுயவிளக்கமும் கொடுத்திருக்கிறார்.

இன்ஷா அல்லாஹ் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் பற்றி வரக்கூடிய ஹதீத்கள் ஒவ்வொன்றையும் பார்க்கும்போது அனைத்து கேள்விகளுக்கும் இன்ஷா அல்லாஹ் பதில் கிடைக்கும். (கொடுப்போம் என்பதை இந்த பதிவில் தெரிவித்துக் கொள்கிறேன்)

**1000 பேரில் 999 பேர் ஏன் நரகம் போகிறார்கள்?**

முதலில் ஹதீதுக்கு விளக்கத்தை பார்க்கும் முன் மனிதர்களில் ஏன்? 1000 பேருக்கு 999 பேர் நரகம் போகிறார்கள் என்பதை பற்றி பார்ப்போம். ஏன் என்றால் இவ்வளவு தொகையினர் நரகத்திற்கு போவார்களா? என்று மக்கள் ஆச்சரியமாக கேட்கிறார்கள். அதற்கான பதில் குர்ஆனில் இருக்கிறது.

நிச்சயமாக நாம் ஜின்களிலிருந்தும், மனிதர்களிலிருந்தும் அநேகரை நரகத்திற்கென்றே படைத்துள்ளோம். அவர்களுக்கு

இருதயங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் நல்லுணர்வு பெற மாட்டார்கள். அவர்களுக்குக் கண்கள் உண்டு. ஆனால், அவற்றைக் கொண்டு அவர்கள் (இறைவனின் அத்தாட்சிகளைப்) பார்ப்பதில்லை. அவர்களுக்குக் காதுகள் உண்டு. ஆனால் அவற்றைக் கொண்டு அவர்கள் (நற்போதனையைக்) கேட்கமாட்டார்கள். இத்தகையோர் கால்நடைகளைப் போன்றவர்கள் இல்லை! அவற்றை விடவும் வழிகேடர்கள்; இவர்கள் தாம் (நம் வசனங்களை) அலட்சியம் செய்தவர்களாவார்கள்.

(அல்குர்ஆன் 7:179)

இந்த வசனத்தின் மூலமாக 1000 பேருக்கு 999 பேர் ஏன்? நரகம் போகிறார்கள் என்பதை தெளிவாக விளங்க முடிகிறது. மேலும் சொர்க்கத்திற்குள் நுழைவது அவ்வளவு எளிதான காரியம் அல்ல. இன்றைக்கு எளிதாக சொர்க்கம் சென்றுவிடலாம் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ஒருபோதும் நடக்காது என்பதை விளக்கும் விதமாகத்தான் இந்த ஹதீத் அமைந்துள்ளது. மறுமையை பற்றி அலட்சியமாக இருக்கும் முஸ்லிம்கள் இதை எப்போது சிந்திக்க போகிறார்கள் என்பது தெரியவில்லை.

**1000 பேரில் ஒருவர் சொர்க்கவாசி:**

இப்போது ஹதீதின் விளக்கத்திற்கு வருவோம். முதலில் ஆதம் நபியை அல்லாஹ் அழைத்து நரகத்திற்கு செல்ல இருப்பவர்களையும் சொர்க்கத்திற்கு செல்ல இருப்பவர்களையும் தனித்தனியாக பிரியுங்கள் என்று கூறுகிறான். அதற்கு ஆதம் நபி(ஸல்) எத்தனை நரகவாசிகளை? என்று கேட்கிறார்கள். அதற்கு அல்லாஹ், ஒவ்வோர் ஆயிரம் பேரிலிருந்தும் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது பேரை என்று பதிலளிக்கிறான்.

அதாவது ஆதம் நபியின் வாரிசுகளில் ஆதம் நபியின் உம்மத் முதல் மறுமை நாள் ஏற்படக்கூடிய நேரம் வரை பிறக்கும் அனைத்து ஆண்களும், பெண்களும் குறிப்பாக யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார் உட்பட மொத்த தொகையில் ஒவ்வொரு ஆயிரம் பேராக பிரித்து அதில் ஒருவர் சொர்க்கவாசி மற்ற 999 பேர் நரகவாசி என்று தேர்ந்தெடுக்க சொல்கிறான்.

1000 பேர் என்றால் ஒருவர் 10 ஆயிரம் பேர் என்றால் 10 பேர், 1 இலட்சம் பேர் என்றால் 100 பேர், 10 இலட்சம் பேர் என்றால் 1000 பேர், 1 கோடி பேர் என்றால் 10 ஆயிரம் பேர் ஆக ஆயிரத்திற்கு ஒன்று என்ற Precentage அடிப்படையில் சொர்க்கவாசி, நரகவாசி என்று அல்லாஹ் பிரிக்க உத்தரவிடுகிறான். ஆக ஒட்டுமொத்த மனிதர்களில் குறிப்பாக யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார் உட்பட 1000 பேரில் 999 பேர் நரகம் போவார்கள். ஒருவர் மட்டும் சொர்க்கம் செல்வார் என்பது முதல் பகுதிக்கான விளக்கம்.

இப்படி அவன் கூறும் வேளையில் சிறுவன் கூட நரைத்துவிடுவான், கர்ப்பமுற்ற பெண் ஒவ்வொருத்தியும் கர்ப்பத்தைப் பிரசவித்து விடுவாள். மக்களை போதையுற்றவர்களாக நீங்கள் காண்பீர்கள். ஆனால் அவர்கள் போதையுற்றிருக்க மாட்டார்கள். இந்த செய்தியும் குர்ஆனுக்கு விளக்கமாக இருக்கிறது. எனவே, நீங்கள் நிராகரித்தீர்களானால், குழந்தைகளையும், நரைத்தவர்களாக்கும் அந்த நாளிலிருந்து எவ்வாறு தப்பிக்க போகிறீர்கள். (அல்குர்ஆன் 73:17)

நரகத்தில் இருந்து வெளியேறும் ஒரு நபர் யார்?

உடனே மக்கள், ‘இறைத்தூதர் அவர்களே! நரகத்திலிருந்து (வெளியேறும்) அந்த ஒரு நபர் எங்களில் யார்?’ என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள், நற்செய்தி பெற்று மகிழுங்கள்! உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரில் ஓராயிரம் பேர் இருப்பார்கள் என்று கூறினார்கள். இப்படி கூறியதை நவீன கால அறிஞர்கள் எவ்வாறு விளங்கி இருக்கிறார்கள் என்று தெரியுமா?

இன்றைக்கு இந்த பூமியில் ஒரு முஸ்லிம் வாழ்கிறார் என்றால் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் ஆயிரம் பேர் வாழ்கிறார்கள். மேலும் இந்த பூமியில் இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்கு எதிராக செயல்படும் அனைவருமே யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் தான் என்று விளக்கம் கொடுக்கிறார்

கள். அதனால்தான் சொர்க்கவாசிகளில் நீங்கள் நான்கில் ஒரு பங்கினராக, மூன்றில் ஒரு பங்கினராக, பாதி பங்கினராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னதை, சொர்க்கத்தில் நான்கில் ஒரு பங்கு முஸ்லிம்கள் என்றால் மற்ற பங்கினர் யார்? வேறு யாரும் அல்ல, அது யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் தான். யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்திலும் நல்ல செயல்கள் செய்து சொர்க்கம் செல்லக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் அந்த பங்கினர் என்று விளக்கம் கொடுக்கிறார்கள். இவர்களின் புரிதல் சரியா? தவறா? என்பதை பார்ப்போம்.

**உங்களில் ஒருவருக்கு என்பது யாரை குறிக்கிறது?**

முதலில் உங்களில் ஒருவருக்கு என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடுவது யாரை என்று இவர்கள் எங்காவது சொல்லியிருக்கிறார்களா? அவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? எத்தனை பேருக்கு ஒருவராக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? அவர்கள் முஸ்லிம்களா? அல்லது நபி(ஸல்) அவர்கள் உம்மத்தா? அல்லது ஆதம் நபியின் ஒட்டு மொத்த சந்ததிகளா? அவர்கள் யார் என்று தெரிந்தால் தான் உங்களில் ஒருவர் என்பதற்கான பதில் கிடைக்கும். இது பற்றி நவீன கால அறிஞர்கள் எங்கேயாவது விளக்கம் கொடுத்திருக்கிறார்களா? என்றால் இது வரைக்கும் இல்லை. அப்படி என்றால் எந்த அடிப்படையில் இதுபோன்ற விளக்கங்களை கொடுத்து வருகிறார்கள்?

**யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரில் எத்தனை பேர் நரகம் செல்வர்?**

அதுபோல உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் ஆயிரம் பேர் இருப்பார்கள் என்று நபி(ஸல்) அவர்கள் சொல்கிறார்கள். உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் ஆயிரம் பேர் இருப்பார்கள் என்றால் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்கள்? அவர்களில் சொர்க்கம் செல்பவர்கள் எத்தனை பேர்? நரகம் செல்பவர்கள் எத்தனை பேர்? அவர்கள் எந்த சதவிகித அடிப்படையில் சொர்க்கவாசி! நரகவாசி என்று பிரிக்கப்படுகிறார்கள்? உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் ஆயிரம் பேர் இருப்பார்கள் என்றால் அனைவரும் சொர்க்கம் செல்வார்களா? ஃபஸாது செய்யக்கூடிய கூட்டம் சொர்க்கம் செல்லுமா? இதைப்பற்றி எந்த ஒரு விளக்கமும் கொடுக்காமல் உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார் ஓராயிரம் பேர் இருப்பார்கள். அதிலும் முஸ்லிம்களை விட அதிகமாக இருப்பார்கள் என்று சொன்னால் நம்ப முடிகிறதா?

**யஃஜூஜ் மஃஜூஜ் ஃபஸாது செய்யும் கூட்டம் :**

அவர்கள் 'துல்கர் னைனே! நிச்சயமாக யஃஜூஜும், மஃஜூஜும் பூமியில் ஃபஸாது குழப்பம் செய்கிறார்கள்; ஆதலால் எங்களுக்கும், அவர்க ளுக்குமிடையே ஒரு தடுப்பு நீர் ஏற்படுத்தித் தரும் பொருட்டு நாங்கள் உமக்கு ஒரு தொகையைத் தரலாமா? என்று கேட்டார்கள்.

(அல்குர்ஆன் 18:94)

இந்த வசனத்தின் மூலமாக யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் ஃபஸாது செய்யக்கூடிய கூட்டம் என்பது தெளிவாகிறது. பூமியில் ஃபஸாது செய்யக்கூடிய கூட்டம் சொர்க்கத்தில் முஸ்லிம்களை விட அதிகமானவர்களாக இருப்பார்கள் என்று சொன்னால் அதனை நம்ப முடிகிறதா?

அப்படி என்றால் உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் ஓராயிரம் பேர் இருப்பார்கள் என்பதற்கான விளக்கம் என்ன? உங்களில் ஒருவர் என்றால் அவர்கள் யார்? அதுபோல நீங்கள் சொர்க்கத்தில் நான்கில் ஒரு பங்கினராக, மூன்றில் ஒரு பங்கினராக இருப்பீர்கள் என்று சொல்லப்படுகிறதே அந்த நீங்கள் என்று சொல்வது யாரை குறிக்கிறது? இதற்கானவிளக்கம் தெரியாமல் ஹதீதிற்கு உண்டான சரியான விளக்கத்தை பெற முடியாது இதற்கான விளக்கம் என்ன என்பதை பார்ப்போம்.

**யஃஜூஜ் மஃஜூஜ் 1000 பேரில் 1000 பேர் மற்ற மக்களில் 1000 பேரில் 999 பேர் நரகவாசி:**

பொதுவாக ஆதம் நபியின் சந்ததியில் உள்ள ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 1000 பேரில் ஒருவர் சொர்க்கவாசி மற்ற 999 பேர் நரகவாசி என்று பிரிக்கப்படுகிறது.

அதில் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரை மட்டும் தனியாக பிரித்துக் காட்டும் விதமாக, உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் ஓராயிரம் பேர் இருப்பார்கள் என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அதாவது ஆதம் நபியின் உம்மத்து முதல் முஹம்மது(ஸல்) அவர்களுடைய உம்மத்தில் இறுதியாக பிறக்கும் குழந்தை வரை உள்ள அனைத்து மக்களையும் ஒன்றாக சேர்த்து ஒரு பிரிவாகவும் ஆதம் நபியின் வாரிசுகளில் உள்ள யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரை மட்டும் தனியாக பிரித்து மற்றொரு பிரிவாகவும் பிரித்து இருவருக்கும் உண்டான வித்தியாசத்தை வெளிப்படுத்தும் விதமாகத்தான் அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் அவ்வாறு கூறியிருக்கிறார்கள்.

உங்களில் ஒருவருக்கு என்பது யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் தவிர்த்த மற்ற மக்கள் தொகையில் உள்ள ஒவ்வொரு 1000 பேரில் ஒருவர் சொர்க்கவாசியாக இருப்பார். மற்ற 999 பேர் நரகவாசியாக இருப்பார் அதுபோல யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரில் ஒவ்வொரு 1000 பேரில் 1000 பேரும் நரகத்தில் இருப்பார்கள். இதை தான் நபி(ஸல்) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இப்படி நாம் சொல்ல காரணம் நரகத்தில் இருந்து வெளியேறும் அந்த ஒரு நபர் எங்களில் யார்? என்று மக்கள் கேட்கிறார்கள். அதற்கு உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் ஓராயிரம் பேர் இருப்பார்கள் என்று கூறுகிறார்கள். இங்கே ஓராயிரம் பேர் இருப்பார்கள் என்பது எங்கே இருப்பார்கள் என்பதுதான் கேள்வி? அதற்கு பதில் நரகத்தில் இருப்பார்கள் என்பது தான் உண்மை. காரணம் அதற்கு முன்பே ஆதம்(அலை) அவர்கள் சொர்க்கத்திற்கும், நரகத்திற்கும் செல்ல இருப்பவர்களை 1000 பேருக்கு ஒருவர் என்ற சதவிகிதத்தின் அடிப்படையில் பிரிக்கிறார்கள். அந்த சதவிகிதத்தை அடிப்படையாக கொண்டு தான் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரையும், மற்ற மக்களையும் நபி(ஸல்) அவர்களும் பிரித்துக் குறிப்பிடுகிறார்கள். உங்களில் ஒருவருக்கு என்றால் அங்கே 1000 பேருக்கு ஒருவர் என்று தான் பொருள் கொள்ள வேண்டும். அதுபோல 1000 பேர் இருப்பார்கள் என்பதற்கு 1000 பேருக்கு 1000 பேர் இருப்பார்கள் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். அப்படி இல்லை என்றால் உங்களில் ஒருவருக்கு என்பது யாரைக் குறிக்கும் என்ற கேள்விதான் மிஞ்சும். அவர்கள் முஸ்லிம்களா? நபி(ஸல்) அவர்கள் ஒட்டுமொத்த உம்மத்தா? அல்லது நாம் சொன்ன ஆதம் நபியின் சந்ததிகளில் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார்கள் தவித்து இருக்கக்கூடிய ஒட்டுமொத்த மக்களா? அவர்கள் யார்? இதற்கு அவர்களால் ஒரு காலமும் பதில் தரமுடியாது. அப்படி தந்தால் அவர்கள் கொடுத்த அனைத்து விளக்கங்களும் தவறாகத்தான் வந்து நிற்கும்.

## சொர்க்கவாதிகளில் 4ல் 1 பங்கினர் யார்?

அப்படி என்றால் சொர்க்கத்தில் இருக்கும் மற்ற பங்கினர் யார் என்று கேள்வி கேட்கலாம்? சொர்க்கவாசிகளில் நான்கில் ஒரு பங்கினராக, மூன்றில் ஒருபங்கினராக, இரண்டில் ஒரு பங்கினராக நீங்கள் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னது நாம்தான். முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தான நம்மை பார்த்து தான் நபி(ஸல்) அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் சொர்க்கவாசிகளில் நான்கில் ஒரு பங்கினராக, மூன்றில் ஒரு பங்கினராக, பாதி பங்கினராக இருக்க வேண்டும் என்று. அப்படி என்றால் மற்ற பங்கினர் யார்? என்று கேட்டால் அது மற்ற நபிமார்களின் உம்மத்தினர் மற்ற நபிமார்களின் உம்மத்தில் ஈமான் கொண்டு சொர்க்கம் சென்ற மக்கள். இந்த உலகத்தில் இலட்சக்கணக்கான நபிமார்கள் வந்திருக்கிறார்கள். அவர்களின் உம்மத்தில் ஈமான் கொண்டவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்களும் சொர்க்கம் செல்வார்கள்.

அப்படி சொர்க்கம் செல்லும் மற்ற நபிமார்களின் உம்மத்தினரையும் தனது உம்மத்

தில் சொர்க்கம் செல்பவர்களையும் நான்கில் ஒரு பங்கு, மூன்றில் ஒரு பங்கு, இரண்டில் ஒரு பங்கு என்று சதவிகித அடிப்படையில் பிரித்துக்காட்டி இருக்கிறார்கள். மேலும் எனது உம்மத்தினரான நீங்கள் சொர்க்கத்தில் அதிக தொகையினராக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதற்காக அதிகமான பிள்ளைகளை பெறுங்கள் என்று சொல்லக்கூடிய ஹதீத்களும் இருக்கத்தான் செய்கின்றன.

**மஹ்ஷரில் நபி(ஸல்) அவர்களின் உம்மத்தின் சொர்க்கவாசிகள்:**

மேலும், நீங்கள் (மஹ்ஷர் மைதானத்தில் கூடியிருக்கும்) மக்களில் வெண்ணிறக் காளையின் மேனியில் உள்ள கருப்பு முடியைப் போன்றே இருப்பீர்கள். அல்லது கரு நிறக் காளையின் மேனியிலுள்ள வெள்ளை முடியைப் போன்றே (மொத்த மக்களில் குறைந்த எண்ணிக்கையில்) இருப்பீர்கள் என்று சொன்னதும் தனது உம்மத்தில் உள்ள சொர்க்கவாசிகளை தான். மஹ்ஷர் மைதானத்தில் நீங்கள் சிறிய கூட்டத்தினராக இருப்பீர்கள் என்று நபி(ஸல்) அவர்கள் சொன்னது நபி(ஸல்) அவர்களின் உம்மத்தைத்தான் குறிக்கிறது என்று எப்படி சொல்கிறீர்கள்? அது ஒட்டுமொத்த சொர்க்கவாசிகளை குறிப்பிடலாம் இல்லையா? என்று கேட்கலாம்.

ஆதம் நபியின் ஒட்டுமொத்த மக்கள் தொகையில் ஒரு கோடி பேர் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதில் ஆயிரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் 10,000 பேர் சொர்க்கவாசியாக இருப்பார்கள். 10,000 பேர் சொர்க்கவாசிகள் என்றால் அதில் நான்கில் ஒரு பங்கு 2500 பேர், ஆக ஒரு கோடி பேரில் 2500 பேர் நபி(ஸல்) அவர்களின் உம்மத்தில் சொர்க்கவாசியாக இருப்பார்கள். அப்படி என்றால் மஹ்ஷர் மைதானத்தில் அவர்கள் சிறிய கூட்டத்தினராக இருப்பார்கள் என்பது சரிதானே!

**நவீன கால அறிஞர்களின் தவறான புரிதல்:**

ஆக உங்களில் ஒருவருக்கு யஃஜூஜ் மஃஜூஜ் ஓராயிரம் பேர் இருப்பார்கள் என்பது ஆதம் நபியின் சந்ததியில் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தார் தவிர்த்து மற்ற மனிதர்களில் 1000 பேரில் ஒருவர் சொர்க்கவாசியாக இருப்பார். யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினரில் 1000 பேரில் 1000 பேரும் நரகவாசியாக இருப்பார்கள் என்பதுதான் உண்மை. இதை விளங்கிக் கொள்ளாமல், உங்களில் ஒருவர் முஸ்லிம் என்றால் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் கூட்டத்தினர் ஓராயிரம் பேர் இருப்பார்கள். அவர்களும் சொர்க்கம் செல்வார்கள் என்று தவறாக விளங்கிக்கொண்டு ஹதீதுக்கு சுய விளக்கங்களை கொடுத்து முஸ்லிம்களிடம் குழப்பத்தை உண்டாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

மேலும் நபி(ஸல்) அவர்கள் உம்மத்தில் சொர்க்கம் செல்பவர்களையும் மற்ற நபிமார்களின் உம்மத்தில் சொர்க்கம் செல்பவர்களையும் பிரித்துக்காட்டும் விதமாக குறிப்பிட்டதை ஆதம் நபியின் ஒட்டுமொத்த மக்களில் சொர்க்கம் செல்பவர்கள் ஒரு பங்கினரும் மற்ற பங்கினர் யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் என்று தவறாக விளங்கிக் கொண்டு விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.

**முதல் கோணல் முற்றிலும் கோணல்:**

மேலும் தங்களுடைய தவறான புரிதலை மற்ற ஹதீத்களுக்கும் கொடுத்து விளக்கம் பெற முயற்சி செய்திருக்கிறார்கள். அதனால் தான் பல ஹதீத்களுக்கு முழுமையான விளக்கத்தை கொடுக்க முடியாமல் இப்படி விளங்கிக்கொள்ள வேண்டும். அப்படி விளங்கிக்கொள்ள வேண்டும் என்று ஹதீத்களுக்குள் தங்களுடைய சுய விளக்கங்களை திணித்திருக்கிறார்கள். இவர்கள் இதுவரை ஹதீத்களுக்கு கொடுத்த விளக்கங்கள் என்ன? எது சரி? எது தவறு? யஃஜூஜ் மஃஜூஜ் கூட்டத்தினர் அடைத்து வைக்கப்பட்டு இருக்கிறார்களா? அல்லது வெளியில் வந்துவிட்டார்களா? என்பதை ஒவ்வொன்றாக இன்ஷா அல்லாஹ் பார்ப்போம்.

முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பார்கள். அதுபோல இந்த ஹதீதுக்கு அவர்கள் கொடுத்த தவறான விளக்கத்தின் மூலம் அவர்கள் கொடுத்த பல விளக்கங்கள் தவறாகவே அமைந்திருக்கிறது. அது என்ன என்பதை அடுத்தடுத்த பதிவுகளில் இன்ஷா அல்லாஹ் பார்ப்போம்.

# புரோகிதர்களுக்கு எச்சரிக்கை!

இன்னும் நான் இறக்கிய(நெறிநூலை) நம்புங்கள்: இது உங்களிடம் உள்ள(நெறிநூலை) மெய்ப்பிக்கின்றது: நீங்கள் அதை (ஏற்க) மறுப்பவர்களில் முதன்மையானவர்களாக வேண்டாம். மேலும் என் திருவசனங்களைச் சொற்ப விலைக்கு விற்றுவிடாதீர்கள்: இன்னும் எனக்கே, நீங்கள் அஞ்சி (பின்பற்றி) வருவீர்களாக. (அல்குர்ஆன் 2:41)

அற்பக் கிரயத்தைப் பெறுவதற்காகத் தம் கரங்களாலே நூலை எழுதி வைத்துக் கொண்டு, பின்னர் அது அல்லாஹ்விடமிருந்து வந்தது என்று கூறுகிறார்களே, அவர்களுக்குக் கேடுதான்! அவர்களுடைய கைகள் இவ்வாறு எழுதியதற்காகவும் அவர்களுக்குக் கேடுதான்; அதிலிருந்து அவர்கள் ஈட்டும் சம்பாத்தியத்திற்காகவும் அவர்களுக்குக் கேடுதான். (அல்குர்ஆன் 2:79)

எவர், அல்லாஹ் நெறிநூலில் அருளியவற்றை மறைத்து அதற்குக் கிரயமாக சொற்பத் தொகை பெற்றுக் கொள்கிறார்களோ, நிச்சயமாக அவர்கள் தங்கள் வயிறுகளில் நெருப்பைத் தவிர வேறெதனையும் உட்கொள்ளவில்லை; மறுமை நாளில் அல்லாஹ் அவர்களிடம் பேசவும்மாட்டான்; அவர்களைப் பரிசுத்தமாக்கவு மாட்டான்; அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனையும் உண்டு. (அல்குர்ஆன் 2:174)

யார் அல்லாஹ்விடத்தில் செய்த வாக்குறுதியையும் தம் சத்தியப் பிரமாணங்களையும் அற்ப விலைக்கு விற்கிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக மறுமையில் யாதொரு நற்பாக்கியமும் இல்லை; அன்றியும், அல்லாஹ் அவர்களுடன் பேசமாட்டான்; இன்னும் இறுதி நாளில் அவன் அவர்களை (கருணையுடன்) பார்க்கவுமாட்டான்; அவர் களைப் (பாவத்தை விட்டுப்) பரிசுத்தமாக்கவுமாட்டான்; மேலும் அவர்களுக்கு நோவினை மிக்க வேதனையும் உண்டு. (அல்குர்ஆன் 3:77)

தவிர நெறிநூல் கொடுக்கப்பட்டோரிடம் அவர்கள் அதை மக்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்க வேண்டும், அதை மறைக்கக் கூடாது என்று அல்லாஹ் உறுதிமொழி வாங்கியதை (அம்மக்களுக்கு நபியே! நீர் நினைவு படுத்துவீராக!) அப்பால், அவர்கள் அதைத் தங்கள் முதுகுகளுக்குப் பின்னால் எறிந்துவிட்டு; அதற்குப் (பதிலாகச்) சொற்ப கிரயத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் (இவ்வாறு) வாங்கிக் கொண்டது மிகக் கெட்டதாகும். (அல்குர்ஆன் 3:187)

நிச்சயமாக நாம்தாம் 'தவ்ராத்தை'யும் இறக்கி வைத்தோம்; அதில் நேர்வழியும் பேரொளியும் இருந்தன; (அல்லாஹ்வுக்கு) முற்றிலும் வழிப்பட்ட நபிமார்கள், யூதர்களுக்கு அதனைக் கொண்டே (மார்க்க) கட்டளையிட்டு வந்தார்கள்; இறை பக்தி நிறைந்த மேதை (ரப்பானிய் யூன்)களும், அறிஞர்(அஹ்பார்)களும், அவர்கள் அல்லாஹ் வின் நெறிநூலைப் பாதுகாக்க கட்டளையிடப்பட்டவர்கள் என்பதனாலும், இன்னும் அந்நெறிநூலிற்குச் சாட்சிகளாக அவர்கள் இருந்தமையாலும் அவர்கள் (அதனைக் கொண்டே தீர்ப்பளித்து வந்தார்கள்; முஃமின்களே!) நீங்கள் மனிதர்களுக்கு அஞ்சாதீர்கள்; எனக்கே அஞ்சுங்கள். என்னுடைய வசனங்களை அற்பக் கிரயத்திற்கு விற்று விடாதீர்கள்; எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்ததைக் கொண்டு தீர்ப்பளிக்கவில்லையோ, அவர்கள் நிச்சயமாக காஃபிர்கள்தாம். (அல்குர்ஆன் 5:44)

அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களைச் சொற்ப விலைக்கு விற்கின்றனர். இன்னும் அவனுடைய பாதையிலிருந்து (மக்களைத்) தடுக்கிறார்கள், நிச்சயமாக அவர்கள் செய்து கொண்டிருந்த காரியங்கள் மிகவும் கெட்டவை. (அல்குர்ஆன் 9:9)

இன்னும், அல்லாஹ்விடம் செய்துகொண்ட வாக்குறுதியை அற்ப விலைக்கு நீங்கள் விற்றுவிடாதீர்கள்; நீங்கள் அறிந்தவர்களாக இருப்பின், அல்லாஹ்விடம் இருப்பது தான் உங்களுக்கு மிகவும் மேலானதாக இருக்கும். (அல்குர்ஆன் 16:95)

மேலும் நிச்சயமாக வேதமுடையோரில் சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் மீதும் உங்களுக்கு இறக்கப்பட்ட(நெறிநூல்)திலும், அவர்களுக்கு இறக்கப்பட்ட(மற்ற)வற்றிலும் நம்பிக்கை வைக்கிறார்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறார்கள்; அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை அற்ப விலைக்கு விற்கமாட்டார்கள்; இத்தகையோருக்கு நற்கூலி அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது; நிச்சயமாக அல்லாஹ் கணக்கு வாங்குவதில் மிகவும் தீவிரமானவன். (அல்குர்ஆன் 3:199)

"உங்களிடம் ஒரு கூலியும் கேட்காத இவர்களை நீங்கள் பின்பற்றுங்கள்; இன்னும் இவர்களே நேர்வழி பெற்றவர்கள்" (என்றும் அவர் கூறினார்). (அல்குர்ஆன் 36:21)

அல்லது, நீர் அவர்களிடம் ஏதாவது கூலி கேட்டு, (அதைக் கொடுத்ததினால்) அவர்கள் கடன்பட்டு சுமையேற்றப் பட்டிருக்கின்றார்களா? (அல்குர்ஆன் 52:40)

நீர் அவர்களிடம் ஏதாவது கூலி கேட்டு, அதனால் அவர்களுக்குக் கடன் சுமை ஏற்பட்டுவிட்டதா? (அல்குர்ஆன் 68:46)

# ANNAJAATH NOVEMBER 2022

*Published on 29th or 1st Every Month*

TNTAM23305/12/29/2016

இயற்கை தேதிக்கோட்டின் ஃபஜ்ரை நாளின் ஆரம்பமாக கொண்டு மக்காவின் காபாவை முன்னோக்கி கணக்கிடப்பட்ட காலண்டர்.

## ஜமாஅத்துல் முஸ்லிமீன்

நெ.16, பாபு ரோடு, திருச்சி - 620 002.

விளக்கம் பெற தொடர்பு கொள்க : 93451 00888, 93451 54415

## சந்திர நாள்காட்டி MOON CALENDAR

ஹிஜ்ரி HIJIRI 1444 ரபீவுல் ஆகிர் RABEEUL AKHIR 4 2022 அக்டோபர் நவம்பர்

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| சூரியனும் சந்திரனும் (அவற்றிற்கு நிர்ணயிக்கப் பெற்ற) கால கணக்கின்படியே இருக்கின்றன. (அல்குர்ஆன் :55:5) | சந்திர கிரகணம் ஆங்கில IDL, UTC கணக்குபடி 08.11.2022 செவ்வாய்க்கிழமை 11:00:22 TD | மாத ஆரம்ப சங்கமம் ஆங்கில IDL, UTC கணக்குபடி 25.10.2022 செவ்வாய்க்கிழமை 10:49:00 UT இஸ்லாமிய IDL, IUT கணக்கின்படி 29.03.1444 செவ்வாய்க்கிழமை 20:49:00 IUT 26.10.2022 புதன்கிழமை பஜ்ர் முதல் ரபீவுல் ஆகிர் ஆரம்பம். | ர.ஆகிர் 1 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் அக்டோபர் 26 | 2 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் அக்டோபர் 27 | 3 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் அக்டோபர் 28 | 4 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் அக்டோபர் 29 |
| 5 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் அக்டோபர் 30 | 6 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் அக்டோபர் 31 | முதல் பாதி பிறை 7 சூரியன் மறைவில் தலை உச்சியில் பிறை பார்க்கவும் நவம்பர் 01 | 8 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் நவம்பர் 02 | 9 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் நவம்பர் 03 | 10 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் நவம்பர் 04 | 11 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் நவம்பர் 05 |
| 12 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் நவம்பர் 06 | 13 சூரியன் மறைவில் பிறை பார்க்கவும் நவம்பர் 07 | சந்திர கிரகணம் 14 பௌர்ணமி சூரியன் மறையும் போது சந்திரன் உதயமாகும் நவம்பர் 08 | 15 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 09 | 16 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 10 | 17 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 11 | 18 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 12 |
| 19 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 13 | 20 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 14 | 21 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 15 | இறுதி பாதி பிறை 22 சூரியன் உதயத்தில் தலை உச்சியில் பிறை பார்க்கவும் நவம்பர் 16 | 23 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 17 | 24 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 18 | 25 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 19 |
| 26 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 20 | 27 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 21 | 28 சூரியன் உதயத்தில் பிறை பார்க்கவும் நவம்பர் 22 | 29 சூரியன் உதயத்தில் தேய்பிறை பகுதியில் பிறை பார்க்கலாம் நவம்பர் 23 | 30 சங்கமம் நவம்பர் 24 | மாத முடிவு சங்கமம் ஆங்கில IDL, UTC கணக்குபடி 23.11.2022 புதன்கிழமை 22:57:00 UT இஸ்லாமிய IDL, IUT கணக்கின்படி 30.04.1444 வியாழக்கிழமை 08:57:00 IUT 24.11.2022 வியாழக்கிழமை இரவு முடியும் போது ரபீவுல் ஆகிர் முடிகிறது. | சூரியனும் சந்திரனும் இறைவனின் அதிகாரத்திற்குள் குறிப்பிட்ட காலத்திட்டப்படியே சுழல்கின்றன. (13:2) |

## தூய இஸ்லாமிய மார்க்கத்தில்

## தொழுகை முறை

*தொகுப்பு : அந்நஜாத் ஆசிரியர் குழு*

அல்லாஹ்வின் தனிப்பெரும் கிருபையால் குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஃத்கள் மட்டுமே கொண்டு அந்நஜாத்தின் ஆரம்ப காலத்தில் தொடராக வெளிவந்த தொழுகை முறை இப்போது பெரும் முயற்சிக்குப் பிறகு தனி நூலாக வெளி வந்துள்ளது.

இதுகாலம் வரை நடைமுறையிலிருக்கும் ஹனஃபி தொழுகை, ஷாஃபி தொழுகை, மாலிக்கி தொழுகை, ஹன்பலி தொழுகை அஹ்ல ஹதீஃத் தொழுகை, முஜாஹித் தொழுகை, அஹ்மதியா தொழுகை, புதிதாக முளைத்திருக்கும் ஜாக் தொழுகை, ததஜ தொழுகை போன்ற வழிகெட்டப் பிரிவுகளின் தொழுகை முறைகளை விட்டு விடுபட்டு முழுக்க முழுக்க குர்ஆன் ஆதாரபூர்வமான ஹதீஃத்கள் கொண்டு மட்டுமே எழுதப்பட்ட தொழுகை முறையாகும்.

இதில் குர்ஆன், ஹதீஃதுக்கு முரண்பட்ட கருத்துக்கள் இருந்தால் தாராளமாக எவ்விதத் தயக்கமும் இல்லாமல் யார் எடுத்துக் காட்டினாலும் அது உண்மையானால் அதை ஏற்று எங்களைத் திருத்திக் கொள்ள எப்போதும் தயாராக இருக்கிறோம். இது உறுதி.

எல்லாம் வல்ல ஏகனாகிய இறைவன் அவனது கட்டளைகளுக்கு அடிபணிந்து 6:153 குர்ஆன் வசனம் கூறும் ஒரே நேர்வழி நடந்து (வேறு வழி எதுவுமே இல்லை) அல்லாஹ்வின் பூரணப் பொருத்தத்துடன் சுவர்க்கம் புக அல்லாஹ் அருள்புரிவானாக. ஆமீன்!

Owned Printed & Published by : **K.M.H. SHAHUL HAMEED (A) ABOO ABDILLAH**, 16, Babu Road, Tiruchirappalli-620 002. ✆ 2711888, Cell : 9345100888
Printed at : ASIAN COMPUTER OFFSET PRINTER, 33, Kiledhar Street, Tiruchirappalli-620 002. Phone (0431)2700888, 2711388
Published at : 51, Tippiran Thotti Street, Tiruchirappalli - 620 008. ✆ 2711888, 2702417. Cell : 94439-55333
Editor : **K.M.H. SHAHUL HAMEED (A) ABOO ABDILLAH**

If undelivered please return to An Najaath, 51, Thippiran Thotti St., Tiruchirappalli-620 008.